www.padippakam.com

விலை 8-00 ரூபா

# ஈழ சுதந்திரன்

ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
௨௦௨௮
மார்கழி-தை

புத்தகம்: 10 இதழ்: 2
ஜனவரி-1997

∴ சமாதானத்தைக் கொண்டு வரவே இப்போதையப் போர் என்று சொல்வது மோசடி! உலகை ஏமாற்றுவது!

∴ இந்திய மீனவர்களைத் தாக்குவதன்மூலம் இந்தியாவுக்கு எதிராகவும் இப்போர் விரிவடைந்துள்ளது!

∴ அழிவிலிருந்து தப்பிக்கவே ஈழத்தமிழ்மக்கள் இப்போது அகதிகளாக இந்தியாக்கு ஓடி வருகிறார்கள்!

## சந்திரிகா நடத்துவது தமிழர்க்கெதிரான

# இனவாதப் போரே

### சந்திரகாசன் விளக்க அறிக்கை

**சமாதானத்தைக் கொண்டு வரவே இப்போதையப் போர் என்று சந்திரிகா சொல்வது மோசடி. இந்தியாவையும் உலகையும் ஒருங்கே ஏமாற்றுவது உள்ளபடி தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக அழித்தொழிக்கவே அவர் இந்த இனவாதப் போரை நடத்துகிறார். அதனால்தான் உயிர் தப்பிக்க ஈழத்தமிழ் மக்கள் இப்போது அகதிகளாக ஓடி வருகிறார்கள். எனவே இந்தியாவிலுள்ள சனநாயக சக்திகள், சமாதான விரும்பிகள், மனிதவுரிமை உள்ளங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு, இதைத் தடுக்கக் குரல் கொடுக்க முன் வர வேண்டும் என்று ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் சா.செ. சந்திரகாசன் ஒரு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். அது வருமாறு:**

சிறீலங்காவின் குடியரசுத் தலைவர் சந்திரிகா குமாரணதுங்க சிங்கள முப்படைகளின் மூலம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தி வரும் இனவாதப் போரை சமாதானத்திற்கான நடவடிக்கை என்று இந்தியாவையும், உலகத்தையும் ஒரு சேர ஏமாற்றி வருகிறார்.

வடபகுதித் தலைநகரான யாழ்ப்பாணத்தை, மக்களெல்லாம் கொட்டும் மழையிலும் இரவோடிரவாக வெளியேறி விட, வானிலிருந்தும், கடலிலிருந்தும், தரை வழியாகவும் குண்டு மழை பொழிந்து கைப்பற்றிக் கொண்ட சிங்கள ராணுவத்தினர், அங்குள்ள யாழ் கோட்டையில் சிங்கக் கொடியை ஏற்றி விட்டு வெற்றி வெற்றி என்று கூத்தாடினார்கள்.

அதே வேளை அங்கிருந்து வெளியேறிய மக்கள் வன்னிக் காடுகளில், கிளிநொச்சியில் தங்குமிடமின்றி, உணவு, மருந்து போன்ற எவ்வித வசதிகளுமின்றி, மழையிலும், பனியிலும், வெயிலிலும் கிடந்து மாண்டனர்.

### மனித நேயத்திற்கு புறம்பான தடை

சந்திரிகாவின் அரசாங்கம் அந்த மக்களுக்குத்தான் எந்த வித உதவிகளும் செய்து கொடுக்காததுடன், தொண்டு நிறுவனங்களும் உதவி செய்யக் கூடாது என்று மனித நேயத்துக்குப் புறம்பாகத் தடை போட்டது.

யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் அங்கு திரும்பினால்தான் அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அரக்கத்தனமாக அறிவித்தது.

அதே நேரம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதைப் போலவே கிளிநொச்சியையும் தாக்கிக் கைப்பற்ற சிங்களப்படைகள் முன்னேறின.

### சமாதானத்திற்கு சண்டையா?

ஆனால், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போதாகிலும் அங்கிருந்து எல்லா மக்களும் வெளியேறி விட்டாலும், சில முதியவர்கள் இருந்தார்கள். கிளிநொச்சியிலோ, மக்களில் ஒருவர் கூட அங்கிருக்க வில்லை; ஒரு நாய் மட்டுமே இருந்தது என்று படையினரே ஒப்புக் கொண்டனர்.

சந்திரிகா சொல்வதைப் போல இது சமாதானத்திற்கான யுத்தம்தான்; தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல; ஆயுதம் தாங்கிய புலிகளுக்கு எதிரானது மட்டும்தான் என்பது உண்மையாக இருக்குமானால் தமிழ் மக்கள் இப்படி ஓட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காதுதானே! பாதுகாக்கத்தான் படையினர் வருகின்றனர் எனில் மக்கள் ஏன் பதறியடித்துக் கொண்டு ஓடுகின்றனர்?

இந்திய அமைதிப்படை முதலில் சென்றபோது அவர்கள் தங்களைப் பாதுகாக்க வருகிறார்கள் என்ற காரணத்தினால் தான் யாழ்ப்பாணத்து மக்கள் தோரணங்கட்டி, மாலை சூட்டி, ஆரத்தி எடுத்து அன்போடு வரவேற்றனர். சிறீலங்காப் படையினரும் அந்த நோக்கத்தோடு சென்றிருந்தால் அப்படியே வரவேற்றிருப்பார்கள் !

### கற்பழிப்புக் காட்டுமிராண்டித்தனம்

எனினும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய மக்கள் கிளிநொச்சியில் புலிகள் தங்கள் தேவைகளை ஓரளவுக்காவது நிறைவு செய்வார்கள் என்று எதிர்பார்த்து, அது நடக்காததால் வேறு வழியின்றி, சூழ்நிலை நிர்ப்பந்தம் காரணமாக வேண்டா விருப்பாக மீண்டும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினார்கள்.

ஆனால் முதலில் அவர்களை யாழ்ப்பாணத்திற்கு திரும்பச் செய்ய வேண்டுமென்பதற்காக நல்லவர்கள் போல நடித்த சிங்கள ராணுவத்தினர் சில நாட்களிலேயே இனவாதக் கெடுபிடிகளில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள். ராணுவ முகாம்களைக் கற்பழிப்புக் கூடங்களாகவும் மாற்றத் தொடங்கினார்கள். கற்பழித்துக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி, ரஜினி போன்றோரின் கதியே இதற்குச் சான்றாகும். இதில் அவர்கள் மட்டுமல்ல, அவர்களை மீட்கப் போனவர்களும் படுகொலை செய்யப்பட்ட பரிதாபத்தைக் காணலாம். உலகத்தில் இப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனம் வேறு எங்கும் நடப்பதில்லை.

### அனுமதி அவலம்

சமாதானச் சண்டையிடும் சந்திரிகாவின் ஆட்சியில் தமிழர்கள் என்றால் பிறந்த மண்ணிலேயே அந்நியர்களாக நடத்தப்படும் அவலத்திற்கு ஆளாகியுள்ளனர். தமிழ்ப் பகுதியிலேயே ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போவதென்றால் தமிழர்கள் ராணுவத்திடம் அனுமதி பெற வேண்டிய நிலை.

தலைநகர் கொழும்புக்குச் செல்ல வேண்டுமானால், வவுனியாவுக்கு வந்து அனுமதிக்காகக் காத்திருக்க வேண்டும். அங்கு மூன்று நாட்கள் மட்டுமே அனுமதி வழங்குகிறார்கள். அந்த மூன்று நாட்களுக்குள் கொழும்புக்குச் சென்று வேலைகளை முடித்துத் திரும்பி விட வேண்டும்' தவறினால் தண்டனை.

### கொழும்பில் கொடுமை

கொழும்பிலோ, அங்கு சென்று இறங்கியவுடன் பொலிசில் பதிவு செய்தாக வேண்டும். கொழும்பு சென்றவுடன் அங்கு தங்கும் இடத்துக்காரரும் வந்தால்தான் பொலிஸ் பதிவு கிடைக்கும். கொழும்பு வாழும் தமிழர்கள் வடபகுதியிலிருந்து வரும் தமிழர்களுக்கு

(12ம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு வாழ்த்து!

இனிய புத்தாண்டே வருக!
இனவாத இருளே அகல்க!
கனி,காய் பிஞ்சென வென்று
கட்டோடு வெட்டி முறிக்கும்
சனிபோன்ற போரே ஒழிக!
தமிழீழப் பொழுதே புலர்க!
இனியேனும் ஒற்றுமை மலர்க!
ஏதிலி நிலைமை தொலைக!

கிறிஸ்துமஸ் நாளிலே புத்தி
கெட்ட கொழும்பாட்சி தெளிக!
சரிநிகர் தமிழர்க்குத் தராமல்
சமாதானம் வராதென்று புரிக!
வெறிகொண்ட சிங்களப் படைகள்
வெளியேறி அமைதி விளைக!
பரிவோடு இந்தியா, உலகம்
பகை நீக்கித் தமிழரைக் காக்க!

தைத்தமிழ்ப் பொங்கலே வருக!
தமிழினத் தடையெல்லாம் உடைக!
சைத்தானை ஒத்த உட்பகைகள்
தமிழரை அண்டாது மறைக
தைத்துள வன்முறை முட்கள்
சனநாய கத்தைவிட் டகல்க!
வைத்துள கலையெலாம் தமிழர்
வாழ்வோடு கலந்து பொலிக!

புத்தாண்டு வாழ்த்துக்கள் நிறைக!
பொங்கலோ பொங்கல் உயர்க!
நத்தார் வாழ்த்தும் நிறைக!
நாளை நமதாகி வெல்க!
அத்தனை பேருக்கும் எங்கள்
அன்பான வாழ்த்துக்கள்! வாழ்க!
சித்திகள் யாங்கிலும் எதிலும்
சீர்தந்து பேர்தந்து சூழ்க !

-- ஆசிரியர்.

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

www.padippakam.com

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே! நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே! அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று''

— 'மூதுரை'

(நல்ல மனதுடையாரைப் பார்ப்பதும் மிக நல்லதே; நல்லவருடைய நன்மை நிறைந்த சொல்லைக் கேட்பதும் நன்றே; நல்லாருடைய நற்பண்புகளை எடுத்துப் பேசுதலும் நன்றே; அவ்வாறான நல்லவருடன் இணக்கமாக இருப்பதும் எப்போதும் நன்மையுடையதே )

# தெளிவு

## என்று தீரும் எம் தமிழரின் சோகம்?

1997ம் ஆண்டு பிறந்து விட்டது.

சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்பு 1977-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ''தமிழீழம் தான் எம் முடிந்த முடிவு'' என்று ஈழத் தமிழ் மக்கள் ஏகோபித்துத் தீர்ப்பளித்து விட்டனர்.

அப்போது தமிழீழத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் தமிழீழத்தை ஆதரித்து நின்ற வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெற்றனர்.

அகில இலங்கையை ஆதரித்தவர்கள் அடியோடு புறக்கணிக்கப் பட்டனர்.

'தேசியக் கட்சிகள்' என்று சொல்லிக்கொள்ளும் சிங்களக் கட்சிகளின் தமிழ்ப்பகுதி முகவர்கள் முகவரியில்லாமல் ஆக்கப்பட்டனர்.

அதுவரை 'அகில இலங்கை' என்று பேசிவந்த தமிழ்க் கட்சிகள் கூட 'தனித் தமிழீழக் கொள்கை''யை முன் வைத்துப் போட்டியிட்ட 'தமிழர் விடுதலைக் கூட்டணி'யின் கீழ் ஒருங்கிணைந்து நின்றன.

எனவே, அத்தேர்தல் தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பாகவே இருந்தது.

அத் தேர்தலில் தமிழ் மக்களின் தீர்ப்பு தமிழீழப் பிரகடனமாகவே இருந்தது

எனினும், அத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் ''நாடாளுமன்ற சனநாயக முறைகளின் மூலமே தமிழ் மக்கள் தங்களுக்கு இட்ட ஆணையைச் செயல்படுத்துவோம்'' என்று அறிவித்தனர்.

அதன்படியே சனநாயக நடைமுறைகளின் மூலம் உலக ஆதரவினைப் பெற- தமிழீழத்திற்கான அங்கீகாரத்தைப் பெற இலங்கைக்குள்ளும், வெளியிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், சிங்களப் பேரினவாத அரசாங்கம் அரச பயங்கரவாதம் மூலம் அழிக்க முற்பட்டதாலேயே- அத் தேர்தல் தீர்ப்பினை அளித்த தமிழ்மக்களையே அடியோடு ஒழிக்க முற்பட்டதாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ளும் கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டனர்.

இன்றைக்கு ஈழத்தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு பயங்கரவாத முத்திரை குத்த முற்படுவோர் அன்றைக்கு என்ன செய்தார்கள் என்பதுதான் கேள்வி.

1983-ம் ஆண்டு சிறீலங்கா சிங்களப் பேரினவாத அரசு திட்டமிட்டு நடத்திய தமிழினப் படுகொலையின் எதிரொலியாக அடுத்த சில ஆண்டுகளிலேயே இந்தியா தலையிட வேண்டிய கட்டாயம் எற்பட்டு, 1987ம் ஆண்டு ''வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மாகாணம் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம்'' என்பதை சிறீலங்கா அரசும் ஏற்க, இந்தியா அதனுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்ட ஒரு புதிய சகாப்தம் உருவானது.

அதன் மேற்சென்று தமிழ் மக்கள் தங்கள் இறுதி லட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய அருமையான வாய்ப்பு நழுவ விடப்பட்டு, தமிழ் மக்களுக்காக வந்த இந்தியாவை தமிழ்ப் போராளிகளுக்கெதிராக சிறீலங்கா பயன்படுத்திக் கொள்ளுபு நிலை ஏற்பட்டு, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய் விட்டது.

விளைவு?

ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவுக்கும், பல்வேறு நாடுகளுக்கும் அகதிகளாக வெளியேறும் நிலை ஏற்பட்டதோடன்றி, உள் நாட்டிலேயே அகதிகளாக அலைக்கழியும் பரிதாப நிலை ஏற்பட்டு விட்டது.

எல்லாவற்றுக்கும் சிகரமாக யாழ்ப்பாணத்திலிருந்தே ஒட்டு மொத்தமாக வெளியேறி ஓட வேண்டிய துரதிருஷ்ட நிலை உண்டாகியது.

இன்றோ, முழுத் தமிழீழமுமே இரணகளமாகி தமிழ் மக்கள் ஆடுமாடுகளைப்போல அங்குமிங்குமாகத் துரத்தப் படுவதும், உயிர் பறிக்கப்படுவதும், வனமுறைச் செய்யப் படுவதும், தமிழ்ப் பெண்கள் சிங்களப் படையினரால் ராணுவ முகாம்களுக்கு இழுத்துச் சென்று கற்பழிக்கப் படுவதும் அன்றாடக் காட்சிகளாகி விட்டன.

1977-ல் தேர்தல் மூலம் தமிழீழம் பிரகடனம்.

1987-ல் இந்தியா-சிறீலங்கா ஒப்பந்தம் மூலம் தமிழர் தாயகம் ஒப்புக்கொள்ளப்படல்.

1997-ல் அது முழுமை பெறுமா? இனப் படுகொலை நிற்குமா? ஏதிலி நிலை முற்றுப் பெறுமா? என்பதுதான் ஈழத் தமிழினத்தின் இன்றைய எதிர்பார்ப்பாகும்.

இந்தியாவும், உலகமும் அதற்கு உறுதுணை புரிய இப் புத்தாண்டில் பிரார்த்திப்போம்

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

பொங்கல் வாழ்த்துக்கள்!

# முல்லைத்தீவு போல் மற்றொரு ராணுவ முகாமை புலிகள் தாக்கி அழித்து ஆயுதங்களை அள்ளிச் சென்றனர்

### பி.பி.சி. சிங்களச் சேவையின் செய்திச் சித்திரம்

சிறீலங்கா மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த புழுக்குணாவ என்ற இடத்தில் அமைந்துள்ள எல்.ரி.எப்.- பொலிஸ் கமாண்டோ முகாம் தமிழ்ப்புலிகளினால் தாக்கப் பட்டது தொடர்பாக இலங்கைச் செய்தியாளர் இக்பால் அதாஸ் கூறியவை.

அதாஸ் : இன்று மாலை கிடைத்த தகவல் படி 38-பேர் இறந்துள்ளனர். 42-பேர் காயமடைந்துள்ளனர். அவர்களி ல்29-பேர் கமாண்டோக்கள் ஒரு கிராமப் பாதுகாவலர், சமையலர் ஒருவர்.

கேள்வி: இலங்கை இராணுவ உளவுப்பிரிவினருக்கு இந்தத் தாக்குதல் பற்றிய தகவல் முன் கூட்டியே பெறப்பட முடியாமல் போனதா?

அதாஸ்: அப்படி ஏதும் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்திருந்தால் இவ்வாறான பெரிய சம்பவம் நடந்திருக்காது.

கேள்வி: இந்த முகாம் சிங்கள கிராமத்தில் அல்லவா அமைந்திருந்தது?

அதாஸ்: ஆம். சிங்களக் கிராமத்தில்தான். கண்டியில் இருந்து அம்பாறைக்குச் செல்லும் பிரதான பாதையில், மகா ஓயாவுக்குஅடுத்துஇந்தப்புழுக்குணாவை முகாம்இருந்தது.

கேள்வி: அப்படி என்றால் சிங்களக் கிராமங்களை ஊடுருவி எல்.ரி.ரி.ஈ. போராளிகள் தாக்குதல் நடத்துவதற்கு எப்படி முடிந்தது? இதைப் பற்றி ஏதாவது கூற முடியுமா?

அதாஸ்: அதைப் பற்றித்தான் இப்போது புலனாய்வு நடக்கிறது. இதை அவதானிக்கும்போது, கடந்த ஜூலை-17-ல் நடந்த முல்லைத்தீவுத் தாக்குதலுக்குப் பிறகு நிகழ்ந்துள்ள பெரிய சம்பவம் இது. பெரிய சம்பவம் என்றால், இறந்தவர்கள் கணக்கில் மட்டுமல்ல, பெரும் தொகையான ஆயுதங்களையும் அவர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். பெரிய மின் உற்பத்தி சாதனத்தையும் தகர்த்து எறிந்துள்ளார்கள்.

மேலும் தென்னாப்பிரிக்காவில் செய்யப்பட்ட கவச வாகனத்தை எரித்து அதிலிருந்த மூன்று பீரங்கிகளையும் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

கேள்வி: இந்தத் தாக்குதல் மூலம் இராணுவ ரீதியாக எல்.ரி.ரி.ஈ.யினர் எதை எதிர் பார்க்கின்றார்கள்?

அதாஸ்: ஒன்று தெளிவாகிறது. முல்லைத்தீவு முகாமைத் தாக்கி தகர்த்துத் தரை மட்டமாக்கியது போன்றுதான் இதனையும் செய்துள்ளார்கள். நள்ளிரவு 12-மணிக்கு மேல் தொடர்ந்த சண்டை 6 அல்லது 7 மணி நேரம் நடந்தது. மழை நேரத்தில் இது நடந்தது. முற்றாக இந்த முகாமை அவர்களால் அழிக்க முடிந்திருக்கிறது.

கேள்வி: எல். ரி. ரி. ஈ-யினரின் இவ்வாறான தாக்குதலினால் இராணுவத்திற்கு எழுந்துள்ள தற்பாதுகாப்பு பற்றிய முக்கிய பிரச்சனை என்ன?

அதாஸ்: முக்கியமாக எழுகின்ற கேள்வி, ஒரு முகாமை முற்றாக அழித்த பிறகு-இராணுவத்தினரால் மற்ற முகாம்களைப் பாதுகாப்பதற்கென பெரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், இவ்வாறான நிகழ்ச்சி நடந்திருப்பது பற்றியதாகும்.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால் இவர்கள் எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறப்பாக அமையவில்லை என்பதுதான். அதற்குக் காரணம், இந்த பொலிஸ் கமாண்டோக்கள் 100-க்கும் மேற்பட்டோர் இருந்த முகாமில அவர்களின் பாதுகாப்பிற்காக இராணுவத்தினரின் பீரங்கிப் படைப் பிரிவும் இருந்தது. இப்போது இந்தத் தாக்குதலினால், அந்தப் பீரங்கிகள் மற்றும் ஏராளமான நவீன ஆயுதங்கள் பல மின் உபகரணங்கள் அனைத்தையும் புலிகளிடம் இழக்க நேர்ந்திருக்கின்றது.

அந்த முகாமை முழுமையாகத் தரை மட்டமாக்க எல்.ரி.ரி.ஈ-யினருக்கு எப்படி முடிந்தது என்பது பெரும் கேள்விக் குறியாக உள்ளது. எதிர் பார்த்த அளவுக்குப் பாதுகாக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

தமிழாக்கம்
திரு. சுந்தரபாண்டியன்

## யாழ். செல்லும் கப்பலில் கற்பூரம் எடுத்துச் செல்லவும் தடை

வடபகுதிக்கு திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் பயணம் செய்யும் பயணிகள் படையினரால் தடை விதிக்கப்பட்ட பொருள்களை தம்முடன் எடுத்துச் செல்லக் கூடாது என தெரிவிக்கப்படுகிறது.

''இதன் மூலம் வீண் கால தாமதங்களைத் தவிர்க்கமுடியும்'' என்று திருகோணமலை பட்டணம், சூழலுக்குமான பிரதேச செயலாளர் ப.வேலும்மயிலும் தெரிவித்தார்.

குறிப்பாக கற்பூரம், நெப்தலின் உருண்டைகள், சிங்கர் ஒயில், நெருப்புப் பெட்டி, மெழுகுதிரி, சீருடையை ஒத்த துணி, சப்பாத்துப் பொலிஷ் விளையாட்டுத் துப்பாக்கி, பிளேட், சைக்கிள் டைனமோ, தொலைக்காட்சி, ஓடியோ வீடியோ கேசட் மற்றும் படம் பொறிக்கப்பட்ட 'ரிசேர்ட்' என்பனவே அவையாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# கொடிகாமத்தில் இராணுவ கவச வாகனம் புலிகளால் தகர்ப்பு

## பூநகரி புலிகளின் தளங்கள்மீது விமானத் தாக்குதல்

வடக்கில் கொக்காவிலிலும் பூநகரியிலும் இருக்கும் விடுதலைப் புலிகளின் இரு தளங்கள் மீது இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சு ஜெட் விமானங்கள் கடுமையான தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன என்று விமானப் படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

'புலிகளின் இவ்விரு தளங்கள் பற்றியும் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்களையடுத்தே விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின. புலிகளின் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் பற்றிய விபரங்களை அறிவதற்காக அவர்களின் வானொலித் தொடர்புகளை கிரகித்துக் கொண்டிருக்கிறோம்' என்று அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### கண்ணிவெடியில் படை வீரர் சாவு

இத் தாக்குதல்களில் இரு கிபிர் ஜெட் விமானங்கள் ஈடுபட்டதாக புலிகளின் வானொலி அறிவித்ததாக ரா்ய்ட்டர் செய்தியொன்று தெரிவித்தது.

இதேவேளை வன்னியின் ஏனைய பகுதிகளான அக்கராயன்குளம், புத்துவெட்டுவான் ஆகியவற்றிலும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று வவுனியாவுக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சேத விபரங்களை உடனடியாக அறிய முடியவில்லை.

இது இவ்வாறிருக்க, யாழ் குடாநாட்டின் தென்மராட்சியில் கொடிகாமத்தில் படையினரின் 'சராசென்' கவச வாகனமொன்று புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியதையடுத்து ஒரு படை வீரர் கொல்லப்பட்டார். அத்துடன் 4 படை வீரர்கள் கடும் காயங்களுக்கு இலக்காகினர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

### டெலோ அங்கத்தவர் கடத்தப்பட்டார்

கண்ணிவெடியில் சிக்கிய கவச வாகனம் தீப்பிடித்துக் கொண்டதெனினும் அதில் இருந்த எஞ்சிய 7 படையினரையும் மீட்க முடிந்ததாகவும் பேச்சாளர் கூறினார்.

கிளிநொச்சி நகரின் மேற்குப் பகுதியில் பாதுகாப்பு படையினர் மறைந்திருந்து புலிகள் மீது தாக்கியதில் இருவர் கொல்லப்பட்டதாகவும் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் படையினருக்கு சேதமில்லை எனவும் தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உறுமனை என்னுமிடத்தில் புலிகள் டெலோ அங்கத்தவர் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

### படையினர் எடுத்த ஆயுதங்கள்

நவாலியில் படையினர் நடத்திய தேடுதலில், பின் கண்ட பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஒரு ரி 56 கைத்துப்பாக்கி 1 ரி 56 மகஸின், 8 ஆர்பி ஜி. ஷெல்கள் 4 பங்களூர் (கப்பலைத் தாக்கும்) குண்டுகள், 2 சுவிட்சுகள், ஒரு வெடிப் பொருள் பாத்திரம், 220 சுற்று தோட்டாக்கள், ஒரு ரேடியோ செற். ஒரு கைக்குண்டு, உள்ளூரில் தயாரிக்கப்பட்டது.

வலிகாமம் பிரிவில் உள்ள கொழும்புத்துறையில் தேடுதல் நடத்திய படையினர் மலசல குழி ஒன்றில் இருந்து 467 கைக்குண்டுகளையும், ஒரு ஆர்பிஜி ஷெல்லையும் கண்டு பிடித்தனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக சஞ்சிகைகளில் ஈழத்துச் செய்திகள் ஒரு பார்வை

**- க. இரத்தினராசசிங்கம் -**

உயிருக்குப் போராடிக் கொண்டு இருப்பவர்களைக் காப்பாற்ற மருந்து வாங்க வருகிறவர்களைக் கைது செய்வது மனிதாபிமானம்தானா?

சிங்களப் படைத் தாக்குதலினால் புலிகள் மட்டும் காயமடையவில்லை. நூற்றுக்கணக்கான தமிழ் மக்களும் காயம் அடைந்தார்கள். அவர்களுக்கு வைத்தியம் செய்ய மருத்துவமனை இல்லை. மருந்துகளும் இல்லை. மருந்துகள் போகக் கூடாது என்று இலங்கை அரசு தடை விதித்து இருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை போய் தமிழர்களுக்கு வைத்தியம் செய்யவும் இலங்கை அரசு தடை விதித்திருக்கிறது.

இந்த நிலையில் சிங்களப் படைத் தாக்குதலில் காயம் அடைந்த தமிழன், தமிழ்ப் பெண்கள் தமிழ்க் குழந்தைகள் சாக வேண்டியது தானா?

''ஈழத் தமிழர் உயிர் காப்போம்'' என்ற தலைப்பில் ராணி 8-12-96 இதழில்.

ஃ ஃ ஃ

ராமேஸ்வரம் வந்ததும் முதலில் வந்த அகதியின் கடந்த கால வாழ்க்கை பற்றி விசாரிக்கப்படும். போட்டோ எடுத்து அவருடைய கைரேகையும் பதிவு செய்யப்படும். சேகரித்த தகவல்களை இலங்கையில் உள்ள நேஷனல் இன்டலிஜன்ஸ் பீரோவிற்கு தமிழகப் பொலிசார் அனுப்புகிறார்கள். அகதிக்கு எதிரான தகவல் வந்தால் அந்த அகதி சிறப்பு முகாமிற்கு 'ஸ்பெஷல் காம்ப்' அனுப்பப்பட்டு விட வேண்டும். அகதிகள் முகாம், சிறப்பு முகாம் என இரண்டு முகாம்கள் புலிகள், போராளிகள் என்றால் அவர்கள் மட்டும் சிறப்பு முகாமுக்கு அனுப்பப்படுவார்கள்.

'அகதிகள் அரசின் உத்தரவு' என்ற தலைப்பில் டிசம்பர் 4-10 'தமிழன் எக்ஸ்பிரஸ்' இதழில்.

ஃ ஃ ஃ

இலங்கையில் விடுதலைப்புலிகள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைப் பற்றியோ, அவர்களது செயல்முறைகள் சரியா தவறா என்பது குறித்தோ விவாதிப்பது நம் நோக்கமல்ல. அது அயல் நாட்டு விவகாரம். அவர்களது தலைமையை, வழி காட்டுதலை ஏற்றுக் கொண்டவர்கள் துன்பப் படுகிறார்களோ, மகிழ்ச்சி கொள்கிறார்களோ அது அவர்களது பிரச்சினை. நம்முடைய கவலையெல்லாம் தமிழ் நாட்டைப் பற்றித்தான்...

''எங்கே உங்கள் இரும்புக்கரம்?'' என்ற தலைப்பில் 12-12-96 'குமுதம்' ஆசிரியத் தலையங்கம் இப்படித் தொடங்குகிறது.

# புத்தாண்டிலாவது இனச் சிக்கலுக்கு நல்லதொரு தீர்வு ஏற்படுமா?

**-''கேயார்''-**

''ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்'' என்ற பாடலை எப்பவும் பாடிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஈழத் தமிழர்கள் விடயத்தில் ஒவ்வொரு வருடமும் அழிவைத் தேடும் ஆண்டாகவே பிறந்து கொண்டிருக்கிறது.

1983க்கு முன்பாகவே ஆரம்பிக்கப்பட்ட ஈழப் பிரச்சினை ஒவ்வொரு ஆண்டுப் பிறப்பும் ஒவ்வொரு எதிர்பார்ப்புடன் அடியெடுத்து வைக்கும். அதே போல் தான் 1983, 1988, 1990, 1995 ஆண்டுகளும் எதிர்பார்க்கப்பட்டன.

ஆனால் அந்த ஆண்டுகளில் நடைபெற்ற துயரச் சம்பவங்களை நினைத்தாலே பிறந்துள்ள புதுவருடமும், தொடரப் போகும் பல வருடங்களும் ஈழத் தமிழ் மக்களை எவ்வாறு வழி நடத்தப் போகின்றன என்பதே கேள்வி.

இதே வேளை 1996 ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர், அக்டோபர் மாதங்களில் யாழ்ப்பாணக்குடா நாட்டின் மீது இராணுவம் தொடுத்த தாக்குதலை நினைக்கும் போது அந்த வேதனைகளைத் தாங்காத மக்கள் இன்றும் கூட தமிழகத்தை நோக்கி படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அகதிகளாக. இதுவரை ஏழாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகப் புதிதாகத் தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மேலும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தமிழகத்துக்கு வருவதற்காக மன்னார் பகுதியில் தவம் இருப்பதாகவும் செய்திகள் கிடைக்கின்றன.

தடைகளைத் தாண்டி தண்ணீரைக் கடக்க முற்பட்ட போதும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கையோ ஆயிரத்தைத் தாண்டும்.

இதைவிட யாழ்ப்பாணத்தில் சிங்களக் கொடி ஏற்றி விட்டோம் என கொக்கரித்துக் கொண்ட இராணுவம் யாழ்ப்பாணத்தில் தற்போது மேற்கொண்டு வரும் கொலைகள் மட்டும் ஐநூறைத் தாண்டும் எனவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. மேலும் யாழ்ப்பாணத்தில் பொருளாதார நிலைமை சுமுகமாக இருப்பதாக இராணுவம் கூறிக் கொள்கிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலையோ 200 ரூபா, ஒரு முட்டையின் விலையோ 18 ரூபா.

யாழ்ப்பாணத்தின் உயிர் நாடியாக விளங்கும் யாழ்ப்பாண வைத்தியசாலை போதிய மருத்துவர்களோ, ஊழியர்களோ இல்லாததன் காரணமாகச் செயலிழந்து இருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றது.

இவ்வளவுக்கும் மத்தியில் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி விடலாம் என்ற நோக்கத்தில் அரசாங்கம் அரச படையினரை உஷார் படுத்தி விட்டுள்ளது.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் என்றதும் அரசியல் கட்சிகள் (தமிழ்) அனைத்தும் அதனைப் பிற்போடுமாறு அரசினை வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கு பகுதிகளில் தனது படையினர் மூலம் மேற் கொண்டு வரும் தாக்குதல்களைத் தொடர முடியாத நிலையிலும், படையினர் பற்றாக்குறையான நிலையிலும், அவசர அவசரமாக உள்ளூராட்சித் தேர்தலுக்கு அழைப்பு விடுத்திருப்பது ஏதோ சூட்சுமம் இருப்பதாக கருத இடம் தருகிறது.

மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் தொடர் தாக்குதல்களினால் படையினர் கிலி கொண்டுள்ளனர்.

படையில் இருந்து ஓடியவர்களைத் தேடியும் பாதுகாப்புப் படையினர் சிங்களப் பகுதிகளில் வேட்டையாடி வருகின்றனர்.

இதே வேளை கிளிநொச்சி பகுதிகளில் சன நடமாட்டமே இல்லாத நிலையில் பாதுகாப்புப் படையினர் தூர இடங்களுக்குச் சென்று தாக்கக் கூடிய ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இவை ஒரு புறம் இருக்க இந்தப் புது வருடத்திலாவது பிரச்சினைகள் தீர்ந்து ஈழத்தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ வழி பிறக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com




அன்புள்ள ஆசிரியருக்கு,

''இந்தியாவைப் புறக்கணித்து இன்னொரு நாட்டு மத்தியஸ்தமா ?'' என்று சிறீலங்கா குடியரசுத் தலைவர் சந்திரிகாவை நோக்கி, ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகத் தலைவர் . சந்திரகாசன் விடுத்திருந்த கேள்விக்கணை நூற்றுக்கு நூறு சரி. அதே நேரத்தில் ஒரு சுண்டைக்காய் நாடு தன்னைப் புறக்கணிக்க முற்படுகிறதே என்ற உறுத்தல் இந்தியாவுக்கு ஏற்படவில்லையே என்ன செய்வது ?

என் கே எம். பிள்ளை, நாகர்கோயில்.

இந்தியாவைப் புறக்கணிக்கிற சந்திரிகா அரசைச் சாடுவது சரிதான். ஆனால் அதையே விடுதலைப்புலிகளும் செய்தனர்; செய்கின்றனர். இதற்கு என்ன செய்வது?

R. S. மாத்ருபூதம், பூந்தமல்லி.

'நீதி கிட்டும் வரைத் தாங்கிடுவீர்' என்ற தமிழீழ தாசனின் முதல் பக்கக் கவிதை இக்கால கட்டத்திற்கு மிகவும் பொருந்துவதாக இருந்தது பாராட்டுகிறேன்.

கவித்தென்றல் எஸ். எம். சம்சுதீன்,
சென்னை-84.

''தனியொரு இயக்கத்திற்கல்ல, ஈழத் தமிழருக்கே ஆதரவு தேவை'' என்ற தலைப்பிலான ஆசிரியத் தலையங்கம் அருமை. இதைத் துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு தமிழ் நாட்டில் உள்ள ஈழ ஆதரவாளர்கள் அனைவருக்கும் அனுப்பி வைத்தால், 'புலிப் பேச்சினால்' இந்திய ஆதரவில் அவர்கள் ஏற்படுத்தும் நலிவைப் போக்க உதவியாக இருக்கும்.

எல்.பி லூர்துசாமி, அதிராம்பட்டினம்.

தமிழ்ப்பெண் கிருஷாந்திக்கு நேர்ந்த கொடுமை நெஞ்சைப் புண்ணாக்கியது. சிங்களப் படையினரின் கற்பழிப்புக் காட்டுமிராண்டித் தனத்தை, உலக மனச்சாட்சியைத் தட்டியெழுப்பித் தடுத்து நிறுத்தாவிட்டால், இலங்கையில் தமிழ்ப் பெண்கள் மானத்தோடு வாழ முடியாத நிலை ஏற்படலாம்.

பொ கண்ணன், வத்திராயிருப்பு.

பாரிசில் புலிப் பிரமுகர்கள் படுகொலையைப் பற்றி பி.பி.சி.க்கு லாரன்ஸ் அளித்திருந்த பேட்டி கண்டேன். அது கண்டிக்கத்தக்கதுதான். அதே நேரம் தங்களுக்கு ஆகாதவர்களையெல்லாம் அவர்கள் தமிழர்கள் என்றும் பாராமல் புலிகள் கொடூரமாகக் கொலை செய்தார்களே . லாரன்ஸ் அதற்கு என்ன் பதில் சொல்வார்?

இரா. தவமணி, தூத்துக்குடி-3.

''இந்தியாவைத் தவிர வேறு மத்தியஸ்த நாடு ஏது?'' என்று கேட்டு, சந்திரிகாவைத் தெளிவு படுத்தும்படி 'கேயார்' எழுதிய கட்டுரையைப் பார்த்தேன் இந்தியா மத்தியஸ்தம் செய்ய முன் வராத போது என்ன செய்வது ?

, பெ. அ, நல்லத்ம்பி கொளத்தூர்,

இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கும் அகதி மாணவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளை 'குயுக்தியார்' தன் பதிலில் பட்டியலிட்டிருந்தது பாராட்டும்படி உள்ளது.

வை. சிற்சபேசன், கோவை-1.

சென்னைப் பேராயர் அருட்திரு மா. அசரியாவின் ''ஈழத் தமிழர்கள் எம் சகோதரர்கள். அவர்கள் நலம் பெற நாடுகிறோம்'' என்ற ஆசியுரையை ஈழசுதந்திரனில் வாசித்துப் பெருமிதமடைந்தேன் அத்துடன் பேராயரின் கவிதையையும் வெளியிட்டிருந்தது சிறப்பாக உள்ளது.

சி. சந்தியாகு, சென்னை-4

முதல்வருக்கு ஒரு கண்ணீர்க்கடிதம் ஈழசுதந்திரனில் பார்த்தேன். ஒன்றுதானா ? இப்படி எத்தனையோ கண்ணீர்க் கடிதங்கள் நாள்தோறும் அவருக்கு அனுப்பப் படுகின்றன. ஆனால், அவருடைய கருணைப் பார்வை ஏனோ எம் மீது இன்னும் விழாமல் இருக்கிறது.

எஸ். சிறிஸ்கந்தராஜா, சென்னை-78.

'ஒரு குறளை உணர்வோம்' 'அருகோவின் கட்டுரைத் தொடரை நீண்ட இடைவெளிக்குப் பின் வெளியிட்டிருந்தீர்கள். இடைநிறுத்தாமல் வெளியிட்டால் தொகுத்து வைக்க வசதியாக இருக்கும்.

மா. பவானந்தன், வந்தவாசி.

ஈழப் பிரச்சினையில் இந்தியாவைப் புறக்கணித்தால் தமிழனுக்கு பயன் பெரியதாக இருக்காது. இந்தியாவின் மத்தியஸ்தமே நமக்கு என்றும் பொருந்தும். வேறு நாட்டு மத்தியஸ்தம் நமை நிச்சயம் வருத்தும். வேறு மத்தியஸ்தம் ஒன்றினை ஏற்றால் அது நமது கண் மூடித்தனம் ஆகும் கடன் வாங்கியும் கோல் ஊன்றும் போக்காகும்.

சோகவி. செல்வநாதன், தோப்புக்கொல்லை.

# போர் நடக்கும் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்: சந்திரிகா–தமிழ்க்கட்சிகள் குழப்பம்

**பி.பி.சி. கூறும் செய்தி**

இரு மூத்த அரசியல்வாதிகளான இபிடிபி எனப்படும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா அவர்களும் புளட் எனப்படும் தமிழ் ஈழமக்கள் விடுதலை கழகத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களும் ஜனாதிபதியைச் சந்தித்து மூன்று மணி நேரம் பேசினார்கள். வடக்கில் தேர்தலில் போட்டியிட இன்னும் தயாராக இல்லை என்பதையும், போட்டியிடத் தயார் செய்வதற்கு இன்னும் கூடுதலாகக் கால அவகாசம் தேவை என்பதையும் அவர்கள் ஜனாதிபதிக்கு விளக்கினார்கள். ஜனாதிபதி தங்கள் கருத்தைப் புரிந்து கொண்டதாகவும், தேர்தல் திகதியை ஒத்திப் போட தயாராக இருப்பதாகவும் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

## பரவலான கண்டனம்

ஆனால் இந்தச் செய்தியை ஜனாதிபதியின் அலுவலகமோ தேர்தல் ஆணையாளரோ, உறுதிப்படுத்தவில்லை. வேட்புமனு காலக் கெடு அடுத்த வாரம். அதாவது வேட்புமனு சமர்ப்பிப்பதற்கான காலக் கெடு அடுத்த வாரம். தேர்தல்கள் 1997ம் ஆண்டு ஜனவரி அல்லது பெப்ரவரி திங்களில் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கில் போர் வலயத்தில் கடந்த 13 ஆண்டுகளுக்குப் பின்னர் நடக்கும் உள்ளூராட்சித் தேர்தல் இதுவாகத்தான் இருக்கும். ஆனால் இந்தத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நாள்தொட்டே, இது குறித்துப் பரவலாக கண்டனங்கள் எழுந்துள்ளன.

## அச்சுறுத்தல் ஏற்படும்

வடக்கில் தொடர்ந்து சண்டை நடந்து கொண்டு இருப்பதால், தாங்கள் தேர்தல் பரப்புரை செய்ய முடியாது என்பதுதான் உண்மையான நிலமையாயிருக்கும் போது அங்கு ஜனநாயகமும், அமைதியும், சிவில் நிர்வாகமும் மீண்டும் ஏற்படுத்தப் பட்டுவிட்டன என்பதோர் கருத்தை அரசு உருவாக்க முயல்கிறது எனச் சென்ற மாதம் 5 தமிழ்கட்சிகள் வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது. தமிழ்ப்புலிகளும் தமது எதிர்ப்பை தெளிவாக்கினர். இந்த எதிர்ப்பு தேர்தலில் கலந்து கொள்ளும் வேட்பாளருக்கும், வாக்காளர்களுக்கும் ஒரு அச்சுறுத்தலாக வரலாம் எனப் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்கனவே மூன்று தடவை ஒத்திப் போடப்பட்ட தேர்தல்கள் முதலில் நடத்தப் பட வேண்டும் என அரசை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர். அனைத்துலக அரங்கில் நம்பிக்கை பெறுவதற்கு இராணுவத்தின் ஆதிக்கத்தில் இருக்கும் வடக்கில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என நம்பியிருந்த ஜனாதிபதிக்கு இந்தத் தேர்தலை ஒத்திப் போட எடுக்கும் முடிவு பெரியதோர் விட்டுக் கொடுத்தலாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு, பி.பி.சி. தனது கொழும்பு முகவர் புளோரா பொஸ்பட் அளித்த செய்தி என்று, 9-12-93 அன்றைய ஒலிபரப்பில் கூறியுள்ளது.

# தென்னிந்திய சரக்கு கப்பல்: கொழும்பு துறைமுகம் தடை

**பி.பி.சி. தரும் தகவல்**

கொழும்பில் உள்ள துறைமுகத்தை பயன்படுத்தும் தென்னிந்திய சரக்குப் படகுகள் மீது அரசு மீண்டும் தடை விதித்திருக்கின்றது. தமிழ் புலிப் படையினர் பலத்த பாதுகாப்பிற்குட்பட்ட துறைமுகத்தில் ஊடுருவதை தடுப்பதற்காகவே இந்தத் தடை விதிக்கப்பட்டதாக இலங்கை அரசு கூறுகின்றது.

தென்னிந்தியாவில் இருந்து சரக்குப் படகுகள் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து வருவதை தடை செய்யும்படி அந்த உத்தரவு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா அவர்களிடம் இருந்து வந்ததாக கப்பல்துறை மற்றும் துறைமுகத்துணை அமைச்சர் மகிந்த விஜயசேக்ரா கூறியுள்ளார்.

சுமார் ஒரு ஆண்டிற்கு முன்னர் புலிப்படையினர் கொழும்புத் துறைமுகத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்த முயன்று தோல்வி அடைந்தனர். இந்த சம்பவத்திற்குப் பின்னர் துறைமுக அதிகாரிகள் சரக்குப் படகுகள் மீது தடை விரித்தனர். கடல் படையினரின் ஆலோசனையின் பேரில் ஆறு மாதங்களுக்குமுன்னர் இந்தத் தடை நீக்கப்பட்டது. இப்போது மீண்டும் போடப்பட்டுள்ளது. முக்கிய இறக்குமதியாளர்கள் தென்னிந்தியாவில் இருந்து காய்ந்த மிளகாய், கருவாடு, அரிசி, சர் கரை போன்ற பொருட்களை சிறு சரக்குப் படகில் கொண்டுவருவது வழக்கம். இனி தெற்கு நகரான காலியில் உள்ள துறைமுகத்தைப் பயன்படுத்தும்படி இவர்களுக்கு கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு, பி.பி.சி. தனது 5-12-96 ஒலிபரப்பில் கூறியுள்ளது.

ஆனால் வெளியுறவு அமைச்சர் டில்லி சென்றதைத் தொடர்ந்து 20-12-96 முதல் மீண்டும் இந்தியப் படகுகட்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**திருமலையில்**

# முகமூடிகள் முன்னிலையில் தமிழ்பெண்களிடம் விசாரணை

திருகோணமலைக்கு அருகிலுள்ள உவர்மலை பகுதியில் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடத்தினர்.

வீடுகளிலிருந்த ஆண்களும் பெண்களும் குழந்தை இயேசு ஆலய பகுதிக்கு வந்து சேருமாறு பணிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

சந்தேகத்திற்கிடமானோர் முகமூடி நபர்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

இத்தேடுதலின் போது பெண்களே துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர். பெண்களைச் சோதனை செய்வதற்காக தனியான மறைப்புக் கூண்டு ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. பெண்களை போலீசார் சோதனையிட்டனர். குழந்தைகளும் சோதனையிடப்பட்டனர்.

மாவீரர் தின காலத்தின் போது பெண் புலிகள் திருமலை நகருக்குள் ஊடுருவக் கூடுமென பாதுகாப்புப் படையினருக்கு இரகசிய தகவல்கள் கிடைத்திருப்பதையடுத்தே இத் தேடுதல் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது.

சுற்றிவளைப்பு காரணமாக உவர்மலை பிரதேசம் பரபரப்புக்கு உள்ளானது. சிலர் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை திருமலை பிரதேசத்திலுள்ள சோதனை நிலையங்களில் பெண் பயணிகளே தற்போது தீவிரமாக சோதனையிடப் படுகின்றனர். சோதனை நிலையங்களில் பெண்களுக்கென தனியான சோதனை மறைவிடம் அமைக்கப்பட்டு பெண் பொலீஸாரால் சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

www.padippakam.com





# முகாம் எரிந்து முடிந்து விட்டது மக்கள் வயிறு எரிவு முடியவில்லை

தொகுப்பு : கி. பாபு

ஆறு வருடங்களாக அகதி முகாமின் ஆஸ்பெஸ்டாஸ் சீட் அழுது இருக்கின்றது. இதை தாங்கும் சவுக்குத் தடி கூட பல முறை செத்து விறகாகி உள்ளது. சுற்றி உள்ள தார் அட்டைகள் பண்ணாடையான பின்பு சுடாத மண் கல் சுவரானது. இது வீடு. அகதியின், அரண்மனை. இங்கு கூரைக்கு கீழே நாங்கள் கோபுரமாக கொடி ஏற்றி உள்ளோம். மழை நீர் ஒழுகாதிருக்க. அட்டை பெட்டி, உரப்பை கொண்டு அடிக் கூரை பலர் அமைத்தது உண்டு; அனல் வெப்பமும் கூடும் குளிரும் தாங்கட்டும் என்று. இது எலிகளுக்கு, ஓர் மைதானம். பத்தடி வீட்டுக்குள்ளேயே பல வருடங்கள், அடுப்படி எரிந்தது உண்டு. படுக்கையறை, படிப்பறை சுவாமியறை எல்லாம் அடுப்பறையுடன் தான். சமாதானப் பேச்சுவார்த்தை சாகடிக்கப்பட்ட பின்பு அடுப்பறை தனியாகப் போனதுண்டு.

நாங்கள் அகதிகள் தான் அனைத்தையும் இழந்தோம். ஆனால்; உழைப்பையும் உற்சாகத்தையும் இழக்கவில்லையல்லவா! ஆம் நாமும் பீனிக்ஸ் பறவை போல்தான். அது சாம்பலிலும் பிறக்கும். நாம் வேர்வையில் உயர்வோம்.

எங்கள் வேதனை வாழ்க்கை வேர்வையில் நனையும் போது நவம்பர் 20-இல் நள்ளிரவு தீ திடீர் விருந்தாளியாக வந்தது. அணைக்க கடுமையாக முயற்சி செய்கையில் அது 43 வீடுகளை அணைத்துக் கொண்டது. உடமைகள் உறைவிடம் சாம்பலானது. உயிர் இழப்புக்கள் ஏதுமில்லை என்றாலும் உடமைகள் பெரும்பாலும் இழப்பு.

தீயணைப்பு படையினர் தீயை அணைத்தனர். காவல் துறை உயர் அதிகாரிகள் உடன் வந்தனர் ஆறுதல் கூறினர். அரசுப் பணியாளர் வந்து அறிக்கை எடுத்து சென்றனர். சுற்று வட்டாரக் கிராம மக்கள் பேருதவி புரிந்தனர். ஈழ ஏதிலியர் மறு வாழ்வு கழக மாவட்டத் தொண்டர் தன் கழகத்திற்கும் நலன் விரும்பிகளுக்கும் தகவல் தெரிவித்தனர். கழகத் தொண்டர் நேரடி விஜயம் புரிந்தார். புதுகை, ஆலங்குடி, பங்குத் தந்தைகள் வந்து பார்த்தனர். பல உதவிகள் புரிவதாய் கூறினர். திருச்சிராப்பள்ளி யேசு சபை அகதிப் பணியாளர் அன்புடன் அன்றிரவே நிதியுதவி அளித்தார். இன்னும் ஏராளம் பேர் எம்க்களித்த உதவியை என்றும் நாம் மறவோம்.

இனி எமக்குத் தேவை வீடு. காக்கைக்கு கூட கூடுண்டு. கதியிலி எமக்கு கடவுள்தான் துணையாக அருளவேண்டும். உடனடியாக சேதம் அடைந்த வீட்டையும்; பழுதான நிலையில் உள்ள இதர வீடுகளையும் கட்டித் தர அரசு உடனடி உதவி புரியுமா?

20-இல் இருந்து இன்று வரை இருளில் இருக்கின்றது முகாம் இனி எப்போது எமது லேனா விளக்கு அகதி எமக்கு மின்சாரம்? சீக்கிரம் எமக்கு செய்தி கிட்டுமா?

## சிரிப்பதா? அழுவதா?

''அடாது மழை பெய்தாலும், சுப்பையாண்ணை விடாமல் வந்திடுவார் எண்டு எங்களுக்கு எப்படியும் தெரியும்.''

பார்த்தீங்களே சுப்பையாண்ணரே வந்திட்டார்! வாங்கோ. சுப்பையாண்ணை உங்களுக்கு, அங்கத்தை நியூஸ் நிறைய இருக்கும் எண்டு நினைக்கிறேன்.

தம்பி எங்கட சனங்களுக்கு எங்கடையூர் செய்தியள் தான் வேணும் கண்டியோ!

சரி ஒண்டொண்டால் சொல்லுறன் கேள் தம்பி,

யாழ்ப்பாணத்தில இருந்து எனது அன்பர் உப்ப கிட்டடியில் இங்கைவந்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை முனிசிப்பாலிட்டி லிமிட்டுக்குள்ள எந்தப் பிரச்சனையும் இல்லையாம். ஆனால் ''முனிசிப்பாலிட்டி லிமிட்'' டைத் தாண்டி எந்த நேரமும் எதுவும் நடக்குமாம்.

தப்பித் தவறி ஏதோ ஒரு இடத்தில ஒரு சம்பவம் நடந்தால் அந்தப் பகுதி உடனடியாக சுற்றி வளைக்கப்பட்டு பொடியன்கள் பொட்டையள் என்று பரர்க்காமல் எல்லாரையும் முட்டுக் காலில கல்லுகளுக்குமேல இருக்கச் சொல்லினமாம். இதற்கிடையில் வழமையான இராணுவப் பூசையும் நடக்குதாம்.

இராணுவத்தின் இந்தச் செயலால் கொழும்பு செல்வோர் பட்டியல் நீண்டு கொண்டும் போகுதாம்.

இதற்கிடையில மோனை ''கிருஷாந்தி''யோட மர்மக் கொலைகள் தொடர்கதை நிற்கேல்லையாம். ''கிருஷாந்தி கொலை'' தவறுதலாக வெளியே தெரிய வந்துட்டுது என்றும் வெளியே வராமல் நடைபெற்ற இராணுவக் கொலைகள் மட்டும் ஐநூறைத் தாண்டும் எண்டும் சொல்கினமாம்.

இவையெல்லாம் காணாமல் போனோர் பட்டியலில் சேர்த்தாச்சாம்.

வெள்ளைக்காரன் கோட்டையைச் சுற்றித்தான் சுற்று மதில் கட்டி இருந்தான் எண்டால், சிங்களப்படையோ பலாலி விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் சுபாஸ் ஒட்டல் வரைக்கும் குளத்துக்கு ''பண்ட்'' போடுகிற மாதிரி ''பண்ட்'' போட்டிருக்கினமாம்.

## குமுகாயமும் சமுதாயமும் ஒரு வாசகரின் ஐயமும்; விடையும்

ஐயா,

ஐப்பசி - கார்த்திகை மாதத்திற்குரிய ஈழ சுதந்திரன் இதழை பார்த்தேன். அதில், 'கவிதைச்சரம்' பக்கத்தில், எனது கவிதையும் இடம் பெற்றிருப்பதைக் கண்டவுடன் மிகமிக மகிழ்ச்சியடைந்தேன். நான், அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் ஐயா, இந்த இதழில் குறை நிறைகளை எழுதலாம் என நினைக்கின்றேன்.

முதல் பக்கத்தில் திரு. சந்திரஹாசன் ஐயா அவர்கள் வெளியிட்டிருந்த அறிக்கையில், ''இப்போதைய அகதிகள் வருகைக்கு இலங்கை ஜனாதிபதியே காரணம்'' என்பதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது மிகவும் மகிழ்ச்சியடையச் செய்கின்றது.

கர்ப்பிணிப் பெண்ணின் நிலையையும், மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களையும், எடுத்தியம்பியமைக்கும் ஈழ சுதந்திரனின் முதல் பக்கத்தில் அம்பலப்படுத்தியமைக்காகவும் ஈழ சுதந்திரனை மனமாரப் பாராட்டுகின்றேன்.

கல்வியின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு இதழிலும், ஏதேனும் ஒரு வகையில் ஈழ சுதந்திரனில் வெளியிடுவதையொட்டி மிகவும் பெருமிதமாக உள்ளது.

யாழிலிருந்து வந்த கண்ணீர்க் கடிதங்கள், வாசிக்கும் பொழுதே கண்ணீரை உகுத்துவிடுகின்றதாக இருந்தது.

6-ம் பக்கத்தில் இடம் பெற்றுள்ள கவிதைச் சரத்தில் இரண்டாவதாக இடம்பெற்றிருந்த கவிதையின் தலைப்பில் ''குமுகாயப் பொறுப்பில்லா எழுத்தாளர் ஏன்? என்று அச்சிடப்பட்டிருந்தது. இது, சமுதாயப் பொறுப்பில்லா எழுத்தாளர் ஏன் என்பதை தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளதா அல்லது அதே தானா என்பது புலனாகவில்லை.

தி. சித்திரவடிவு
இ.அ. முகாம், மண்டபம்.

அன்புச்சகோதரியின் பாராட்டுக்கு நன்றி.

கல்வி நமது கண்கள். அதைக் கட்டிக் காப்பது கடமையாயிற்றே குமி + ஆயம் —குமுகாயம் என்பது தூய தமிழ்ச் சொல். ஒரு கூட்டமாக ஒத்த உணர்வும் பழக்கவழக்கமும் கொண்ட மக்கள் இனத்தைச் சுட்டும் ஒரு ஒட்டுச் சொல்? சமுதாயம் எனும் சமற்கிருதச் சொல்லுக்கு இத்தகைய பொருட்செறிவு கிடையாது. —ஆசிரியர்.

## குழியிலிருந்து 6 சடலங்கள் எழுதுமட்டுவாளில் மீட்பு

தென்மராட்சி பகுதியிலுள்ள எழுதுமட்டுவாள் கிராமத்தில் புதைகுழி ஒன்றிலிருந்து ஆறுபேரின் பிரேதங்களை அப்பகுதி மக்கள் மீட்டெடுத்திருப்பதாக வவுனியாவுக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. நான்கு பிரேதங்கள் அடையாளம் காண முடியாதபடி உருக்குலைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பொன்னு அமிர்தரத்தினம் (வயது 33) கந்தசாமி புலேந்திரராசா (வயது 16) கந்தையா தியாகராசா (வயது 16), ராமு மாணிக்கம் (வயது 43) ஆகிய நால்வரின் பிரேதங்களே அடையாளம் காணப்பட்டுள்ளன.

42 நாள்களுக்கு முன்னர் காணாமல் போனவர்களே புதைகுழியில் இருந்து பிரேதங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

## செய்திச்சரம்

22-11-1996

— நேற்று திருப்பூரில் புலி என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுரேஷ் (25) என்பவரை போலிஸார் கைது செய்தனர்.

(தினமணி, இந்து)

ராஜீவ்காந்தி கொலை குறித்து விசாரிக்கும் ஜெயின் கமிஷன் முன் நேற்று மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் ஆஜராகி சாட்சியம் அளித்தார்.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன்)

23-11-96

ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரிக்கும் ஜெயின் கமிஷன் முன்பு தமிழக முதல்வர் மு. கருணாநிதி நேற்று சாட்சியம் அளித்தார்.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன், இந்து)

மதுரையில் இலங்கையைச் சேர்ந்த 8 பேர்கள் உள்பட புலிகள் ஆதரவாளர்கள் 17 பேர்கள் நவம்பர் 6-ம் தேதிக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காவல்துறை தலைமையகம் தெரிவிக்கிறது.

(தினமணி, கதிரவன்)

ஈழப் பிரச்சினையில் தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்தை உருவாக்க அனைத்துக் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச இருப்பதாக ஈழ தேசிய விடுதலை முன்னணியின் துணைப் பொதுச் செயலாளர் இராஜரத்தினம் நேற்று முன்தினம் கூறியுள்ளார். மேலும் புலிகளுடன் ENDLF கை கோர்க்கிறது என்று பத்திரிகைகளில் வெளியான செய்தி உண்மை அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(தினமணி, தினமலர்)

இலங்கையில் கந்தளாய் என்ற இடத்தில் இராணுவ ஜீப் ஒன்று புலிகள் வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கியதில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார், இரண்டு அதிகாரிகள் காயமடைந்தனர்.

24-11-96

இலங்கையில் இராணுவ காவலில் இருந்த தமிழர்களில் கடந்த மூன்று மாதங்களில் 300 க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போய்விட்டனர். இவர்கள் அனைவரும் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் சந்திரிகாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

(தினமலர், கதிரவன், இந்து)

நேற்று முன்தினம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேசுவரம் மினவர்கள் மீது இலங்கை கடற்படை சுட்டதில் திருமால் (25) வயது மினவர் கொல்லப்பட்டார்.

(கதிரவன்)

படிப்பகம்

# கவிதைச் சாரம்

## மூடிய விழிக்குள்

ஈழந்தில் வசிக்கும் என் நண்பிக்கு நான் எழுதிய கவிதை.

என்னுயிர்த்
தோழியே
எனது கிராமத்திற்கு
நீ
சென்றால்
அதோ பார்!
எனது வீட்டிற்கு
செல்லும்
அகலமான
மண் பாதை!
எங்கே
என்று தேடுகிறாயா?
அது தான்
ஆர்மியின் ஆதிக்க
அடிச் சுவடுகள்
பட்டு இன்று
ஒற்றையடிப்
பாதையாய்
மாறி விட்டது!

என்றாலும்
என்
மனசு
என் வீட்டு
வேலியிலே
பூத்திருக்கும்
கொண்டல்
மரத்தினிலும்
முள் முருங்கை
சிதறி விட்ட
பூக்குவியலிலும்
பூவரச
மர நிழலிலும்
தானடி உள்ளது!

இரட்டை
ஜடை
போட்டு
சீருடையணிந்து
புத்தகப்பையுடன்
துள்ளி ஓடும்
புள்ளி மானாய்
நான்
பாடசாலை
சென்ற
நாட்கள்
இதோ
என்
இமை மூடிய
விழிகளுக்குள்...

வீ. தமிழ்
அத்தியந்தல்

## என் ஆசைகள் !

காற்றைக்
கட்டியணைக்க
ஆசை
கடல் நீர்
முழுவதையும்
பருகி மகிழ
ஆசை
கோடை வெயிலை
ப்ரிட்ஜினுள்
வைக்க
ஆசை
கொடைக்கானல் குளிரை
குக்கரில் வைத்து
வெப்பமேற்ற
ஆசை
சுழலும் பூமியை
நிறுத்தி வைக்க
ஆசை
எரியும் ஈழப் பிரச்சினையைத்
தீர்த்து வைக்க
ஆசை

க. ஜெயகௌரி
இலங்கை அகதி முகாம்,
தாழையூர்,
தேவகோட்டை.

## ஏன் எங்கட்கோர் விடிவில்லை ?

இருளும் ஒளியும் மாறி மாறி வருமே !
இன்பமும் துன்பமும் அப்படியே-எம்
இனத்தின் சாபம் இப்படியா ?
ஏன் எங்கட்கோர் விடிவில்லை ?

கணக்கில் எண்ணிக்கை குறைவென்றால்
பெருக்கில் உள்ளவர் பிரித்தாள்வதா ?
பிறப்பில் மனிதம் வேறுபடுமா ?.
பெரும்பான்மை சிறுபான்மையை நசுக்கலாமா ?

கடமை தன்னை மறக்கலாமா ?
உரிமை தன்னை ஒடுக்கலாமா ?
உயிர்கள் அழிவைப் பெருக்கலாமா ?
உணர்வைக் கல்லாய் மதிக்கலாமா ?

வளரும் பயிர்கள் எத்தனையோ !
வாழும் மழலைகள் எத்தனையோ !
இளைஞர் சமூகம் எத்தனையோ !
இன்னுயிர் தாகம் தீராதா ?

ஆறறிவற்ற உயிரினம் கூட அன்பைப் பேணுமே
பேரறிவான மானிடம் ஏனோ பேரினவாதம் பேசுதுமே!
யாருளர் ஈழவர் துயர் தீர்க்க ?
வாடிடும் மக்களைக் கரை சேர்க்க ?

நாடா ? காடா ? தெளிவில்லை
நம்பிக்கை காண வழியில்லை
"வாழ்வா ? சாவா? போராட்டம்!
கடல் வற்றித்தான் வருமா தமிழ் ஈழம் ?

வளங்கள் என்றும் சொந்தமில்லை
வாழ்வு என்றும் நிலையுமில்லை
'மனிதம்' பேண மனதிருந்தால்
அழிவும் ஒழிந்து அமைதி பெறுமே !

-பொன்னத்தி

## அகிம்சையை நோக்கு அகதி மாணவனே

தமிழன் என்றதால்-நாம்
தாயகத்தில் தரக்குறைவாக நடத்தப்படலானோம்
தட்டிக் கேட்டதால்-நாம்
தலையிழந்து தவிக்கலானோம்

தமிழச்சி என்றதால் - நாம்
சிங்களர் காம எச்சிக்கு இலையானோம்
பூ தளர்ச்சியடையாமல் - நாம்
புதுப் புரட்சிக்கு புயலானோம்

ஈழத்துப் பிஞ் சென்றதால் - நாம்
இனப்பகைத்தீக்குப் பஞ்சானோம்
நெஞ்சமற்ற மனிதரினால் - நாம்
தஞ்சம் புகும் அகதியானோம்

கருவறையில் வரும் முன்னே - நாம்
இரும்பறையில் சிறையானோம்
சிறையறையின் சித்திர வதைகளால் - நாம்
படகேறிக் கடந் கரை விரைந்தோம்

நுரை பொங்கும் கடலில் கூட - நாம்
சிங்கள இனப்பசிக்கு இரையானோம்
தமிழகத் தரை வந்து சேரும் முன்னே - நாம்
எதிரிகளின் தாக்குதலால் தேய்பிறையானோம்

அகதியாக வந்ததால் - நாம்
அவதியாக வாழலானோம்
உயர் கல்வி கற்க முடியாமல் - நாம்
தினம் தினம் வருந்தலானோம்

வாருங்கள் ஈழ மன்னர்களே - நாம்
வளமான ஈழமமைப்போம்
சேருங்கள் ஒற்றுமையாய் - நாம்
செதுக்கிடுவோம் புதுத் தமிழீழம்

ஈழவரின் இரத்தங்கள் வீணாகின்ற போது - நாம்
பேனாவால் யுத்தங்கள் செய்திடுவோம்
தமிழனை ஆயுதத்தால் அழிக்கின்ற பேரினவாத அரசுக்கு - நாம்
அகிம்சையின் வலிமையை உணர்த்திடுவோம்

து. துரைநேசன்
இ. அ. முகாம், தோப்புக்கொல்லை,
புதுக்கோட்டை.

## எதிர்காலம் கேள்விக் குறியாய்...

பூவுண்டு பொட்டுண்டு என்னிடத்தில்
ஆனால் புருஷன் இல்லை என் அகத்தில்
புதிராக இருக்கின்றதா உங்களிடத்தில்
புரிய வில்லையா என்நிலை வையகத்தில்

சீறிவந்த வெடிகுண்டின் சீற்றத்தில்
சிதைந்து கலைந்துவிட்ட நிலையதனில்
மீறி வந்தேன் என் குடும்பக் கூட்டை விட்டு
இனப் பறவை கூட்டத்தின் துணைகொண்டு
நாடி வந்தேன் தமிழகத்தில் அகதி என்று

சுமந்து வந்த முத்து இன்று என் கையில்
தவழ்ந்து வரும் வாழ்க்கை முன்னிலையில்
கேள்விகளைச் சுமந்து நிற்கும் பேதையான்
தமிழினத்தின் அகதியரில் ஒருத்தி நான்.

குறிப்பு :-

ஈழத்தில் இருந்து கணவனை விட்டுச் சிதறி தமிழகத்திற்கு அகதியாக வந்த ஒரு பெண்ணின் புலம்பல் :

சுமந்த கரு கையில் குழந்தையாய்
களைந்த கனவுகள் கண்ணில் மின்ன
எதிர்காலமே ஒரு கேள்விக் குறியாக நிற்கிறாள்
அந்த அபலைப் பெண்

திருமதி. சி. எல். கனகரத்தினம்
இ.அ.முகாம், இரும்பூதிப்பட்டி

## சுதந்திர தேசம்

சிந்திய குருதியில் மலரட்டும் ஈழம்
செந்தமிழ் ஈழத்தில் கலையட்டும் சோகம்
சுதந்திர தேசம் ஆகட்டும் ஈழம்
சொர்க்க வாழ்வைச் சொரியட்டும் காலம்

சிங்களப் படையெடுப்பு ஈழத்தில் நிற்கட்டும்
சிதறாமல் தமிழ்மக்கள் ஒற்றுமை பொங்கட்டும்
தமிழ்ப் போராளிகள் கரங்கள் ஒன்று சேரட்டும்
தமிழனைத் தமிழன் கொல்வது நிற்கட்டும்

புதிய ஜனனம் தமிழினம் அடையட்டும்
புன்மைக் குணங்கள் பொசுங்கி மறையட்டும்
அகதி இழிநிலை விரைவில் அகலட்டும்
அமைதி நலவாழ்வு யாவர்க்கும் கிடைக்கட்டும்

P. S. அன்ரனி
அ.இ. முகாம் கீழ்ப்புதுப்பட்டு

## தாய் மண்ணில் உள்ள தமையனுக்கு...

என்னுடன் பிறந்த அண்ணனே
நம் இருவருக்கும்
தன் உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டி வளர்த்தாள்
நமது அன்னை
நீ உதிரத்தை நீர்ப்பாய்ச்சி
உதவுகின்றாய்
அவண் நாட்டிற்கு
நான் ஓடிவந்துள்ளேன்
அயல் நாட்டிற்கு

உன் கரங்கள் அங்கு உன்னிடம்
இருக்கின்றனவா என்று தெரியாமல்
நான் இங்கு
கரப்பந்து விளையாடுகிறேன்

நீ அங்கு
கண்களை இழந்ததை அறியாமல்
நான் இங்கே
காதல் புரிகின்றேன்

எனக்கு நடக்கக் கற்றுக்கொடுத்த
உனக்குக் கால்கள் இல்லை
நான் இப்போது
நன்றாக நடக்கின்றேன்
ஆனால் உனக்கு
உதவ முடியவில்லை

நீ ஓடியாடி
நாட்டைக் காக்கின்றாய்
நான் ஓடிவந்து என்
உயிரை மட்டுமே காத்துள்ளேன்
நான் உன்னிடமிருந்து
கற்றுக் கொண்ட பாடங்களில் எல்லாம்
சிறந்த பாடம்
உனது தியாக வாழ்க்கை

சு. சிவா (எ) மகேந்திரன்
இ. அ. முகாம்
வாழவந்தான் கோட்டை

படிப்பகம்

www.padippakam.com

## நான் பறவையானால்...!

செல்வி -சித்திரா தேவசகாயம்
இ.அ. முகாம், போகநல்லூர்

நான் பறவையானால்......
மாந்தோப்பில் மகிழ்ந்து விளையாடும்
கிளியாக மாட்டேன் !
பூஞ்சோலை தனில் கூவும்
இனிய குயில் ஆகவும் மாட்டேன் !
மழை மேகம் கண்டு
தோகை விரித்தாடும்
அழகு மயில் ஆகிடவும் மாட்டேன் !

சமாதானம் என்ற பெயரில்
சாதாரணப் புறாவாக மாட்டேன்!
மெட்டுக் குலையாமல் பாடிடும்
தேன் சிட்டுக் குருவி
ஆகிடவும் மாட்டேன்!
மடை தன்னில் காத்திருக்கும்
கொக்காக மாட்டேன் !
பக்குவமாய்ப் பால் தன்னை
பிரித்தெடுக்கும் அன்னப் பறவையாய்
தோன்றிடவும் மாட்டேன் !

ஆகாயத்தில் அழகாக வட்டமிட்டு
அப்பாவிக் கோழிக் குஞ்சின்
ஆவியை அவலமாய்ப் பறித்து
தனக்கிரையாக்கி கொள்ளும்
பருந்து, ஆகிடவும் மாட்டேன் !
பகலெல்லாம் குருடாகித் திரியும்
ஆந்தை இனத்திலும்
அவதரிக்க மாட்டேன் !
காலையில் கூவிடும்
கொண்டைச் சேவலும் ஆகமாட்டேன் !
கரைந்தெழுப்பும் காக்கை இனத்திலும்
கட்டாயம் சேரமாட்டேன் !

ஆம் ! நான் பறவையானால்
எம் இனத்தின் இரத்தத்தை
இன்பமாய் உறுஞ்சுகின்ற
சிங்கள உதிர மதை
தேடித் தேடி முடிப்பதற்கும்
தென் இலங்கை சென்று அவர்தம்
தேசத்தை அழிப்பதற்கும்
அந்தக் கயவர்களின்
கொட்டத்தை ஒழிப்பதற்கும்
மலை மேலே ஒளிந்திருந்து
பழிதீர்க்கும் சொடிய கழுகாகத்தான்
கட்டாயம் உருவெடுப்பேன் !

## நாளை வரலாறு உன் கையில்

நாளை வரலாறு உன் கையில் என நாளும்
நினைத்து விடு தோழா

நாற்புறமும் எதிரிகள் கூட்டம்
நிச்சயம் எடுக்கும் ஒரு நாள் ஓட்டம்

ஈழத்தை அழிக்க நினைக்குது சிங்கள அரசு
நிச்சயம் பதிலடி கொடுக்கும் ஒரு நாள் ஈழ முரசு

நம் மக்கள் மீது வைக்குது ராணுவம் உலை
என்றும் நிற்காது எங்கள் ஈழ அலை

தினந்தோறும் தாக்குது சிங்களப் படை
இதற்கு விதிக்கும் ஈழம் ஒரு நாள் தடை

நாள் தோறும் சிந்துகிறது தமிழன் குருதி
நிச்சயம் தோன்றும் ஒரு நாள் அமைதி

ஒற்றுமை ஒன்றே நமக்குத் தேவை
இதுவே ஈழம் அடைய ஒரே பாதை

நாளைய வரலாறு உன் கையில் என
நாளும் நினைத்து விடு தோழா !

செல்வன் K. இராஜேந்திரன்
இ. அ. முகாம், புளியம்பட்டி,
பழனி-624617.

## தொழிலாளி

உழைப்பைப் போற்றும் இமயம்
உலக இருள் போக்கும் சூரியன்
விழிப்பைக் கொண்டு வரும் விடியில்
வியர்வையில் பூத்திருக்கும் சோலை
உழைப்பால் வாழும்—பிறர்
உயர உழைக்கும்
தொழிலாளியே— இத்
தொல்லுகின் படைப்பாளி

'கவிசுரபி'
சுப. சந்திரசேகரன்

### பத்தமேனி 10 வயது சிறுமி கற்பழிப்பு சம்பவம்

# உடனடி விசாரணைக்கு உத்தரவிட ஜனாதிபதியிடம் குமார் கோரிக்கை

யாழ் குடாநாட்டில் அச்சுவேலி பகுதியில் பத்தமேனியைச் சேர்ந்த தேனுகா-செல்வராஜா என்ற 10 வயது மாணவி இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்துவதற்கு அதிகாரிகளைப் பணிக்குமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகாவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக குமார் பொன்னம்பலம் ஜனாதிபதிக்கு பதிவுத் தபாலில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார். அக்கடிதத்தின் விபரம் வருமாறு :

1996 நவ-20,
ஜனாதிபதி, அலரிமாளிகை,
கொழும்பு-3

மேன்மைதங்கிய அம்மணிக்கு,

யாழ் நகருக்கும் பலாலிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருக்கும் அச்சுவேலியின் பத்தமேனியைச் சேர்ந்தவர் இந்த 10 வயது மாணவி தேனுகா-செல்வராஜா. அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இவர் 5-ம் வகுப்பில் கல்வி பயில்கிறார். 1996 நவம்பர் 12 செவ்வாய்க்கிழமை காலை தேனுகா பாடசாலைக்கு சென்று கொண்டிருக்கும் போது சுமார் 8.15 மணியளவில் அவரை கடத்திய இராணுவத்தினர் புத்தூர் கிராம சபைக் கட்டிடத்தில் அமைந்திருக்கும் இராணுவமுகாமுக்கு கொண்டு சென்றனர்.

முகாமில் தேனுகாவின் துகிலுரிந்த சில படையினர் மாறிமாறி அவரைக் கற்பழித்திருக்கிறார்கள். வெறியைத் தீர்த்துக்கொண்ட பின்னர் இப்படையினர் உடல்ரீதியான உபாதைக்கும் மனோரீதியான அதிர்ச்சிப் பேதலிப்புக்கும் உள்ளான தேனுகாவை வெளியே செல்ல அனுமதித்தனர்.

நேரடியாக தனது பாடசாலைக்குச் சென்ற இச்சிறுமி தனக்கு நேர்ந்ததை அதிபரிடம் கூறினார். அச்சுவேலி பிரதான இராணுவ முகாமில் முறைப்பாட்டைச் செய்வதற்காக அதிபர் மாணவிகளையும் கூட்டிக்கொண்டு அங்கு சென்றார். ஆனால் அங்குள்ள முகாம் தளபதியோ அதிபரின்முறைப்பாட்டில் தங்களுக்கு எந்த அக்கறையுமே கிடையாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். உண்மையில் இருவரையுமே இராணுவத்தினர் அந்த முகாமில் இருந்து விரட்டியிருக்கிறார்கள்.

கிருஷாந்தி குமாரசாமியின் விவகாரத்தை போன்றதல்ல தேனுகா விவகாரம்.

ஏனென்றால், இந்த விவகாரத்தில் மிகவும் உறுதியான சான்றுகளை எவராலுமே காண முடியும். பாலியல் சித்திரவதைக்கு ஆளான தேனுகா உயிருடன் இருக்கிறார். சம்பவம் காலை வேளையிலேயே நடைபெற்றிருப்பதால தன்னைக் கற்பழித்த படையினரை அடையாளம் காட்டக்கூடியதாகவும் இருக்கும் என்று நம்பலாம். அவரின் உடைகளும் இருக்கின்றன. அதிபரிடம் இருந்தும் சில சான்றுகளைப் பெற முடியும். இச்சிறுமி டாக்டர் ஒருவரிடம் அழைத்துச் செல்லப்பட்டு காயங்களுக்காக சிகிச்சையளிக்கப்பட்டாரா என்பது எனக்குத் தெரியாது.

தனக்கு நேர்ந்த கதி குறித்து உடனடியாகவே முறைப்பாடு செய்ய இச்சிறுமி ஒரு இராணுவ அதிகாரியிடம் சென்றபோது, அந்த அதிகாரிக்கு தமிழர்களின் இதயங்களை வெற்றிகொள்ளும் அரசின் கொள்கையில் அக்கறையிருக்கவில்லை.

பெறுமதிமிக்க சான்றுகளை நாம் இழக்காதிருக்க வேண்டுமானால், உடனடியாகவே இச்சம்பவம் குறித்து அர்த்தமுடைய விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு நீங்கள் உத்தரவிடுவது சாத்தியமா? இவ்வாறு செய்யாவிட்டால், 'இன சுத்திகரிப்பு' நடவடிக்கையில் அரசாங்கப் இறங்கியிருக்கின்றது என்று கருதவேண்டிய நிலைக்கு தமிழர்கள் தள்ளப்படுவார்கள். ஏனென்றால் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் வடக்கின் பகுதிகளில் கற்பழிப்புச் சம்பவங்கள் அன்றாட நிகழ்வுகளாக அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

அதேவேளை, பாதிக்கப்பட்ட இச்சிறுமியினதும் தாய் தந்தையர் மற்றும் பாடசாலை அதிபரினதும் பாதுகாப்பை தயவு செய்து உறுதிப்படுத்துங்கள். ஏனெனறால், வடக்கில் ஆட்கள் கடத்தப்படுவதும் காணாமல் போவதும் சாதாரணமாகி வருவதாக எமக்கு சாய்திகள் இருக்கின்றன.

உங்கள் உண்மையுள்ள
ஜி ஜி. பொன்னம்பலம்
(ஜுனியர்)
பொதுச்செயலாளர்
அகில இலங்கை தமிழ்
காங்கிரஸ்

### மட்டக்களப்பு மாவட்ட

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் விமான தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மேற்குப்புற பிரதேசங்களில் பரவலாக விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

செங்கலடிக்கு மேற்கே பதுளை வீதியில் அமைந்துள்ள கிராமங்களிலும் கிரானுக்கு மேற்கேயுள்ள பூலாக்காடு, திகிலிவட்டை பகுதிகளிலும் 'புக்காரா' விமானம் நோட்டமிட்டுப் பறந்து திரிந்தது.

அதன் பின்னர் விமானத்திலிருந்து 'ஷெல்' மற்றும் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் மாவீரர் தின கொண்டாட்களை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டுத் தாக்குதல் சத்தங்கள் நகரப் பகுதிகளுக்கும் கேட்ட வண்ணமிருந்தன.

இதேவேளை வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள பொலீஸ் காவலரண்களில் இருந்து தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவரின் வீடு துப்பாக்கிச் சன்னங்களால் சேதமடைந்ததாக வாழைச்சேனை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

துப்பாக்கி ரவைகள் யன்னலை ஊடறுத்து 14 இடங்களில் சேதங்களை ஏற்படுத்தியிருப்பதாக கிராம சேவகர் முறையிட்டுள்ளார்.

"ஈழசுதந்திரன்"
மாத இதழ் சந்தா விபரம
ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00
வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10
அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6
ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :
நிர்வாகி
"ஈழசுதந்திரன்"
14, சேட் காலனி முதல் தெரு
மூன்றாம் மாடி,
எழும்பூர், சென்னை-600 008.

படிப்பகம்

www.padippakam.com



# கூடு விட்டு வந்த பறவைகள்...

சிறுகதை

''தம்பி அகிலன், என்ர மகனே! உனக்கா இப்படி ஆச்சு. இதுக்கா உன்னை நான் ஜேர்மனிக்கு அனுப்பினான்!''

என்ற சாரதா அம்மாவின் சத்தத்தைக் கேட்டுப் பயந்து நித்திரையிலிருந்து அகிலா எழுந்து அறையில் வெளிச்சத்தைப் பரவவிட்டாள். அப்போதுதான் தெரிந்தது அது தாயின் புலம்பல் என்று.

பாவம் சாரதா. இரண்டு பிள்ளைகளையும் இரண்டு கண்களைப் போல் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது தன் கைக்குள் வைத்துக் காத்து வந்தாள். கணவர் பசுபதி அகிலாவிற்கு இரண்டு வயது இருக்கும் போது இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்றிலிருந்து இன்றுவரை அந்தக் குடும்பத்தை சாரதா அம்மா தான் சிறந்த முறையில் நிர்வகித்து வருகிறார்.

கண்வரின் ஓய்வூதியப் பணம் மற்றும் தென்னந் கோப்பு, தோட்டம் இவைகளின் உதவியுடன் கஷ்டம் எல் ந் இல்லாமல், சராசரி வாழ்க்கை நடத்தி வந்தார்.

பிள்ளைகள் இருவரும் படிப்பில் படு சுட்டி. அது மட்டு மல்லாது; ஒழுக்கத்திலும் பார்ப்போர் பெருமைப் படும்படி சிறப்பாக இருந்தார்கள். எப்போதும் சாரதா அம்மாவின் நினைவில் இருவருங்கால வைத்தியர்களாக அகிலனும் அகிலாவும் ஊசலாடிக் கொண்டு இருப்பார்கள். பிள்ளைகளும் அம்மாவின் சந்தோசத்தையே கண்ணும் கருத்துமாகக் காத்துவந்தனர்.

கணவர் இல்லையே என்ற கவலையைத் தவிர வேறு எதுவித கவலையும் சாரதா அம்மாவிற்கு இருந்ததில்லை. அவளின் எல்லாமே இந்த இரு பிள்ளைகள் தான். ஒரு நாள் கூட பிள்ளைகளைப் பிரிந்து அவளால் இருக்க முடியாது. ஆனால் காலத்தின் கோலம் அவர் தன் மகனை வெளிநாட்டிற்கு அனுப்பும்படி ஆகிவிட்டது. ஓய்ந்திருந்த இனப்பிரச்சினை மீண்டும் விசுவருபம் எடுத்து உயிர்ப் பலி எடுக்கத் தொடங்கி விட்டது.

பதினாறு வயதே நிரம்பிய அகிலன் தாயின் நகைகளையும் வீட்டையும் அடைவு வைத்த பணத்தைக் கொண்டு பல சிரமப்பட்டு ஜேர்மனி செல்ல ஆயத்தமானான். அப்போது சாரதா அம்மா பிரிவுத் துயரை அடக்க முடியாது அடக்கிக் கொண்டு ''என்ர மகன் இங்க இல்லாட்டியும் ஜெர்மன் போய்க் கூட படிச்சு டாக்டராய் வந்து அம்மாவின் ஆசையை நிறைவேற்றுவான்', என்று அவன் கன்னத்தில் ஓர் முத்தமிட்டு வழியனுப்பி வைக்கிறார். அவன் சென்றது துயரமாக இருந்த்து. சாரதா அம்மாளுக்கு அவள் கண்ணீரே கன்னத்தைத் தடவி ஆறுதல் சொல்லியது. ஏனெனில் அங்குள்ள எல்லோர்க்கும் இதே போல் பிரச்சினைதான். யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? தமக்குத் தாமே ஆறுதல் சொல்லித் தேற்றிக் கொண்டு இருந்தனர் எல்லோரும்.

அகிலன் சென்று இரண்டு மாதங்கள் கழித்து அவனிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவன் தனது பிரிவுத் துன்பத்தைப் பற்றியும்; அம்மாவையும் அகிலாவையும் இந்தியாவிற்கு வரும்படியும்; தான் பணம் அனுப்புவதாகவும் எழுதியிருந்தான் அத்துடன் ஜெர்மனியில் மேற்கொண்டு தனது படிப்பைத் தொடருவது, சாத்தியப்படாது என்றும், தான் படிக்காவிட்டாலும் அகிலாவையாவது இந்தியாவில் நல்ல பாடசாலையில் சேர்த்து படிக்கவைக்கும் படியும் எழுதியிருந்தான். தன்னுடன் சேர்ந்து மேலும் ஐந்து நண்பர்கள் இருக்கிறார்கள்; அவர்களும் என்னைப் போல் வீட்டை விட்டு வந்ததில் மிகவும் கவலையாக உள்ளார்கள் என்றும் எழுதியிருந்தான்.

ஆனால் அந்தக் கவலையை மறப்பதற்காக என்று அந்த நண்பர்கள் கூறியபடி தானும் மது அருந்தப் பழகிக் கொண்டு விட்டேன் என்று எழுதினால் தன் தாய், தங்கை தாங்க மட்டார்கள் என்று எழுதாமல் மறைத்து விட்டான். சிறு வய்து என்ற படியால் அவனைக் கட்டுப் படுத்த அவனால் முடியவில்லை.

மகனின் விருப்பப்படி சாரதா அம்மாவும் அகிலாவும் இந்தியாவிற்கு வந்தார்கள். முன்பின் இந்தியாவில் அனுபவம் இல்லாதபடியால் அவர்கள் பலவிதமாக ஏமாற்றப் பட்டு பின் கடவுள் செயலாக ஓர் யாழ்ப்பாணத்துக்காரரைச் சந்தித்து நல்ல வீடு ஒன்று வாடகைக்கு எடுத்து சற்று நிம்மதியாக இருந்தார்கள். அகிலாவையும் அந்த குடும்பத்துப் பிள்ளைகள் படிக்கும் ஆங்கிலப் பாடசாலையில் சேர்த்துவிட்டார்கள்.

ஒன்பதாம் வகுப்புவரை தமிழ் மூலம் கற்று வந்த அகிலாவால் ஆங்கிலம் மூலம் கற்று பத்தாம் வகுப்புச் சோதனையில் சித்தி பெற முடியவில்லை. படிப்பில் தோல்வியே இதுவரையில் கண்டிராத அகிலாவால் இதைத் தாங்க முடியவில்லை. அவளுக்குப் படிப்பு மேல் இருந்த ஆர்வம் குறையத் தொடங்கியது. டாக்டராக வரவேண்டும் என்ற எண்ணம் அவளை விட்டு வெகு தொலைவில் போய்க் கொண்டு இருந்தது.

மேற்கொண்டு படிப்பது மிகவும் கடினம் என்று எண்ணி மீண்டும் அந்தப் பரீட்சையை எடுக்க மறுத்து விட்டாள் தன் பிள்ளைகள் இருவரும் வருங்கால டாக்டர்கள் என்றிருந்த சாரதா அம்மாவின் கற்பனைக் கோட்டை இடிந்து நொறுங்கியது

இவற்றின் விளைவால் அவர் ஒவ்வொரு வினாடியும் எதையோ எண்ணி எண்ணி அழுதபடி பைத்தியம் பிடிக்காத குறையாக இருந்தார். யாழ்ப்பாணத்தில் இருந்த சாரதா அம்மாள் இப்போது முற்றிலும் மாறி நாற்பது வயது உள்ளவர் அறுபது வயதாகக் காட்சியளித்தார். தன் மகனை எண்ணி, எண்ணியே பாதியாகப் போய்விட்டார் அவர். மகனைப் பற்றிச் சிந்தித்தவாறு உறங்கியதன் விளைவு தான் அந்தப் புலம்பல். ஆமாம்; அவர் கனவு கண்டு தான் புலம்பினார். தாய் கனவில் புலம்புவதை உணர்ந்த அகிலா,

''அம்மா எழும்புங்கோ. என்ன கனவே காணுறியள்' ஏன் இப்படி கத்துறியள்'' என்று அவள் தோளில் மெதுவாகத் தட்டி எழுப்பினாள்.

அப்போது தான் திடுக்கிட்டு எழும்பிய சாரதா அம்மாள் தான் கண்டது கனவு என்று நிம்மதியடைந்தார்.

''என்ர கனவில் அகிலன் கார் ஓடேக்க பனியில் சறுக்கி பள்ளத்தில் கார் விழுந்திடுது. நான் ஓடிப்போய் பார்த்தால் என்ர பிள்ளை மூச்சுப் பேச்சு இல்லாமல் கிடக்குது. அது தான் பயந்து போய் இப்படிக் கத்திப் போட்டேன். நல்ல காலம் கனவாப் போச்சு. என்ர பிள்ளைக்கு ஒன்றும் ஆகாது அந்தக் கடவுள் கை விடமாட்டான்' என்று கண்ணீர் சிந்தியவாறு தன் மகளுக்குத்தான் கண்ட கனவைப் பற்றிச் சொன்னார் சாரதா அம்மாள். சந்தோசம், நிம்மதி என்ற வார்த்தைகளின் பொருளே இவர்களைப்போல கூடுவிட்டு வந்த பறவைகளுக்கு மறந்து போய்விட்டது.

தன் இரு குஞ்சுகளுடன் சாரதா என்னும் பறவை யாழ்ப்பாணம் என்னும் கூட்டில் இருக்கும் போது இருந்த சந்தோசமான வாழ்வை இழந்து நிற்கிறார். இனப்பிரச்சினையின் விளைவாக. இருந்தும் அவர் மனதில் தன் குஞ்சுகளுடன் மீண்டும் தன் நாட்டை அடைந்து இழந்த இன்பத்தை அந்தப் பழைய மகிழ்ச்சியானவாழ்வைப் பெறுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. அந்த நாளை எதிர் பார்த்து ஒவ்வொரு நாளையும் கழித்துக் கொண்டு இருக்கிறார் சாரதா அம்மாள். இது சாரதா அம்மாள் எதிர்பார்ப்பு மட்டுமல்ல; ஈழக்கூட்டை விட்டு வந்த எல்லாத் தமிழ்ப் பறவைகளின் எதிர்பார்ப்புமாகும்.

கா. தேவிகாராணி,
பெரியார் நகர்,
மதுரை—12.

# மடல் வழிச் செய்தி

## மிதிவெடியில் சிக்கி ஒருவர் பலி

விதானையார் ஒழுங்கைக்குள் சென்ற இருவரில் ஒருவர் மிதி வெடியில் சிக்கி இறந்து விட்டார். உங்கள் வீட்டடி எல்லாம் ஒரே மிதி வெடியுட் அமுக்க வெடியும் தான்.

யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் இருந்து ''செல்'' என்பவர் சென்னையில் உள்ள ''உமா'' என்பவருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

மேலும் இங்கு ஆமிகளின் தொல்லை அதிகரித்த வண்ணமே உள்ளது. எனது இரண்டு பிள்ளைகளும் வீட்டிற்குள்ளேயே இருக்கின்றார்கள். அதுவும் இராணுவத்தின் சுற்றி வளைப்பில். பிடித்துக்கொண்டு போவார்கள். பின் விடுவார்கள். றோட்டில் வெளிக்கிட முடியாது. படிப்பிக்க முடியாது. ரியூசனுக்கு விட முடியாது. தனியாப் போகும் போது பிடித்தாங்கள் என்றால் பின்பு விடாங்கள். எனவே நான் ஒரு இடமும் பிள்ளைகளை விடுவதே இல்லை.

எனது பிள்ளைகளில் ஒருவரையாவது நான் உங்கு கூட்டி வந்து அனுப்புவதற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும். நான் கப்பலுக்கு பதிந்து விட்டு அந்த துண்டை வைத்து காட்டித்தான் இங்கு இராணுவத்தின் பிடியில் இருந்து நான் எனது பிள்ளைகளைக் காப்பாற்றுகின்றேன். கப்பலில் இடம் கிடைத்ததும் எப்படியும் கொழும்புக்கு பிள்ளைகளைக் கூட்டி வருவேன். பின்பு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்.

விதானையார் ஒழுங்கைக்கு சென்ற இருவரில் ஒருவர் வெடியில் சிக்கி இறந்து விட்டார். மற்றொருவர் காலை இழந்து விட்டார். உங்கள் வீட்டு வளவுக்குள்ளும் மிதிவெடிகள் வெடித்திருக்கின்றன. ஆனாலும் வீட்டிற்கு சேதம் ஒன்றும் இல்லையாம்.

இக்கடிதம் 18-09-96 எழுதப்பட்டது.

## நிலமைகளை எழுதமுடியாது

யாழ்ப்பாணத்தில் இருந்து மற்றுமொரு கடிதம்.

''ப'' என்பவர் ''இ'' என்பவருக்கு எழுதிய கடிதம். இங்குள்ள நிலைமைகயை தெளிவாக எழுத முடியாது. இருந்தாலும் உங்களுக்கு ஓரளவு தெரியும் என நினைக்கிறேன். இங்கு டவுண் பகுதியில் இவ்வளவு பிரச்சனை இல்லை. கிராம புறங்களில்தான் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பிரச்சனை நடக்கும்.

மற்றும் இங்கு தொடர்ச்சியாக மழை பெய்கிறது. எல்லாம் எப்பிடி முடியப் போகிறதோ பார்க்கலாம்.

இக்கடிதம் 25-11-96 எழுதப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து ''ப'' என்பவர் சென்னையில் இருக்கும் ''இ'' என்பவருக்கு எழுதிய கடிதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து அநேகர் கொழும்புக்கு போகிறார்கள். இங்கு நிலைமை அவ்வளவு சுமுகமாக இல்லை. ஆஸ்பத்திரிகளில் மருந்துகளும் இல்லை. வைத்தியர்களும் இல்லை. அனேகம் பேர் இடமாற்றம் வாங்கிக்கொண்டு கொழும்பு பேரய் விட்டார்கள்.

இங்கு எல்லா இடங்களிலும் ஆமி இருக்கிறது. அநேக வீதிகளை ''குளோஸ்'' பண்ணி விட்டார்கள். பல இடங்களுக்குப் போவதாய் இருந்தால் சுற்றித்தான் போக வேண்டும்.

இக்கடிதம் 11-11-96 எழுதப்பட்டது.

(தொகுப்பு: ஆர்-ஆர்-எஸ்.)

## கிளிநொச்சியில் மலேரியா தீவிரமாகப் பரவுகிறது

கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா காய்ச்சல் தீவிரமாக பரவிவருவதாக மாவட்ட சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கரயான்குளம் அரசினர் பொது வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியில் தினமும் பெருந்தொகையான மலேரியா காய்ச்சல் நோயாளிகள் சிகிச்சை பெற்று செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com


# தேசங்கடந்த வணிக நிறுவனங்களின் கானகக் கொள்ளை

மரக்கட்டை, மரக்கூழ், தாள் ஆகிவற்றின் அனைத்து தேச வணிகம்ஆண்டிற்கு 100 பில்லியன்டாலர்களாக உயர்ந்துள்ளது மரக்கட்டையே இன்றைய உலகின் மிக மதிப்புள்ள பொருளாக உள்ளது.

மரக்கட்டை வணிகத்தில் 80 முதல் 90 விழுக்காடு தேசங்கடந்த நிறுவனங்களே ஈடுபட்டுள்ளன. தொலை தொடர்புத் துறை கார் உருவாக்கத்துறை ஆகிவற்றுக்கு அடுத்த படியாக இத்துறை உள்ளது. மேலை நாடுகளில் பெருகி வரும் மரப்பொருள்களின் தேவைகளால் காடுகள் அளவின்றி அழிக்கப்படுகின்றன இப்படிப்பட்ட காடழிப்பை ஒருசில நிறுவனங்களே செய்கின்றன என்று ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

,,இண்டர்னேசல் பேப்பர்'' என்ற அமெரிக்க நிறுவனம் 1994 ஆம் ஆண்டு 15 பில்லியன் டாலர்களை விற்றுமுதல் பண்ணியுள்ளது. இது 75 நாடுகளின் மொத்த பாவனைப் பொருள் (GDP) ஆக்கத்தைவிடக் கூடுதலாகும் பொருளியல் வல்லாண்மையைக் கொண்டு அரசியல் அரங்கில் மிக எளிதாக விளையாடி வணிக உரையாடல்களில் தடாலடியாக விதிமுறைகளைத் தளர்த்தி பல ஏழை நாடுகளின் காடுகளை வளைத்துப் போடுவதில் இவர்கள் வல்லவர்கள்.

வாழ்விற்கு அடிப்படையாக விளங்கும் கானகச் செல்வமும், கானுயிர்களும் இதனால் வரைமுறையின்றி மறைகின்றன. ஒன்றிய நாடுகளின் சூழல் மேம்பாட்டு மாநாடு அறிவுறுத்தும் ''நாடுகள் தங்களது இயற்கை வளங்களை நுகர்வும் தங்களது சூழல் கொள்கைகளை உருவாக்கிக் கொள்ளவும் இறையாண்மை உரிமை கொண்டவை' என்றவிதியை கொண்டு மிக எளிதாக இயற்கை வளமிக்க ஏழை நாடுகளை தேசங்கடந்த நிறுவனங்கள் வீழ்த்திவிடுகின்றன இந்த நிறுவனங்கள் பொருளாக்கத்தின் அனைத்து மட்டங்களிலும் ஈடுபடுகின்றன. இதனால் உருவாக்கச் செலவு குறைவதோடு, நல்ல மீத்தமும் கிடைக்கிறது.

மேலும் இவை மாபெரும் தொழில் கூடங்களில் குவியல் முறையாக உல்களாவிய சந்தையை நிறைத்து விடுகின்றன. பெருமளவு பணம் கிட்டுவதால் பல அரசுகள் இப்படிப்பட்ட வணிக முயற்சிகளுக்கு ஊக்கம்தருகின்றன.

நிஷூசிலாந்து நாட்டின் 'ஃபிளட்சர் சேலஞ்ச்' என்ற நிறுவனம் வரிவிலக்குப் பெற்றுமிக வேகமாக வளர்ந்துள்ளது. இது பிரிட்டானிய கொலம்பியா, சிலி, பிரேசில், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் தனது வணிகத்தை விரிவாக்கிக் கொண்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள், தாங்கள் அழித்த காடுகளில் வணிகத்தேவையான மரக்கூழ்தரும் மரங்களை நடுகின்றனர்.

உலகம் தழுவிய சூழலியல் தர நிலைப்பாடுகள் ஏதும் இல்லாததால் உலகெங்கிலும் உள்ள காடுகளை சுரண்டுவதற்கு மிக வாய்ப்பாக உள்ளது. மலேசிய நாட்டின் தொழில் அமைச்சர் 'தற்போது நிலவும் உலக மரக்கட்டை வணிகத்தின் போக்கு நன்மைக்கல்ல'' என்று எச்சரிக்கை செய்கின்றார். (ஆனால் மலேசியாவின் பெரும் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.)

வணிக நிறுவனங்களுக்கு காடுகள் மேலாண்மையில் எவ்வித சூழலியல் பட்டறிவோ கூரறிவோ கிடையாது. இதனால், மரங்களை வெட்டும் போது கடுமையான சூழலியநெருக்கடிகள்தோன்றுகின்றன பல நிறுவனங்கள் மரங்களை வெட்டி முடித்ததும் வேறு இடத்திற்கு நகர்ந்து விடுகின்றன. துடைத் தெடுத்தாற் போன்று உள்ள கானக கன்னி நிலம் மிக கொடுமையாக சீர்குலைந்து போகின்றன.

ரஷ்ய 'ஃபார் ஈஸ்ட் என்ற நிறுவ்னம் இப்படிப்பட்ட மொத்த வெட்டுதலைச் செய்கின்றது. அமெரிக்காவில் தான் இப்படிப்பட்ட பல நிறுவனங்கள் உள்ளன. ஆனால் அந்நாட்டு சட்டங்கள் மிக கறாராக இருப்பதால் வேறு நாடுகளுக்கு இவை சென்று தமது வெட்டுதல் பணியை தொடர்கின்றன. டிரிவியம் வணிக கழகம் சிலி நாட்டின் பத்தாயிரம் ஆண்டு பழமை மிக்க வெப்பக் காடுகளை வெட்டி வீழ்த்த உள்ளது. 'போசி காஸ்கேடு என்ற நிறுவனம் 4,00,000 எக்டேர் காடுகளை மெக்சிகோவில் வெட்டிக்கொண்டு வருகிறது.

வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளில் ஏற்றுமதி செய்வது தடுக்கப்பட்டு உள்ளதால் பல பன்னாட்டுக் கழகங்கள் அமேசான் வெப்ப மண்டலக் காடுகளை விலைக்கு வாங்கி வெட்டத் தொடங்கி விட்டன. இன்றளவில் 4 பெரும் நிறுவனங்கள் அமேசான் காடுகளை கிட்டத்தட்ட பிரிட்டனைப் போல் ஆறு மடங்கு பரப்புள்ள காட்டுப் பகுதியை வாங்கி விட்டன. மேலும் 8 9 மில்லியன் எக்டேர் காடுகளை அதாவது, போர்ச்சுக்கல் நாட்டு அளவுக்கு சமமான காட்டு நிலம் வாங்கப்பட உள்ளது போகிற போக்கில் உலகக் காடுகளை வணிகக் கழகங்களே வெட்டித் தீர்த்துவிடும்.

நன்றி : 'புதியகல்வி'

# பிரிட்டன் மத்தியஸ்தத்தை தமிழ்க் கட்சிகள் ஏற்குமா?

## புளட் தலைவரை பி.பி.சி. கண்ட பேட்டி

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரில் மத்தியஸ்தம் செய்யப் பிரிட்டன் முன் வந்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. இது பற்றி தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாடுகள் கருத்துக்கள் என்ன என்பது குறித்து 'புளோட்' எனப்படும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்தன் தர்மலிங்கன் அவர்களிடம் கேட்டபோது-

எங்கள் கட்சியைப் பொறுத்த மட்டில் நாங்களும் சேர்ந்து மற்ற ஐந்து தமிழ்க் கட்சிகளும், ஒருமூன்றாவது தரப்பு மத்தியஸ்தம் தேவையென்பதை வலியுறுத்தி வந்திருக்கின்றோம். இப்போது இங்கிலாந்து நாடு மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை அறிகின்றபோர்து அதை வரவேற்கின்றோம். இருந்தாலும் அவர்கள் இலங்கை அரசையோ, புலிகளையோ எவ்வளவு தூரம் அழுத்தம் கொடுத்து இந்தச் பேச்சுவார்தகை மேசைக்குக் கொண்டு வர முடியும் என்ற அந்தக் கேள்விக் குறி எமக்கு இருக்கிறது.

கடந்தகாலத்தில் இந்தியா முயற்சித்து முடியாது போனதைக் குறித்து அனைவருக்கும் தெரியும் ஆகவே இவ்வளவு தூரத்திலிருந்து எந்தவித அழுத்தம் கொடுக்கக் கூடிய ஒரு தகுதியுமில்லாமல் அவர்கள் எப்படி மேற்கொள்வர் என்ற ஐயம் எங்களுக்கு இப்போது இருக்கிறது.

கேள்வி : இந்தியா தலையிட்ட நடந்தபோதிருந்த நிலைமை வேறு. இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது அல்லவா?

பதில் : நிலைமையில் எம்மைப் பொறுத்த மட்டில் எந்தமாற்றமும்ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால் இந்த இரண்டு பகுதியுமே விடுதலைப் புலிகளாக இருந்தால் என்ன. அரசாங்கமாயிருந்தால் என்ன தங்களுடைய நிலைகளில் இருந்து இறங்கி வந்து இருப்பதாக இதுவரைக்கும் தெரியவில்லை.

கேள்வி : பிரிட்டன் மத்தியஸ்தம் செய்வதை வரவேற்பதாகக் கூறியுள்ளீர்கள். அப்படியானால் அரசுக்கு ஆதரவு அளித்து வரும் கட்சி என்ற ரீதியில் அரசை அணுகியிருக்கிறீர்களா இதற்கு சம்மதிக்கும் படி?

பதில் : இல்லை, நாங்கள் இதுவரை அணுகவில்லை ஏனெனில் பாராளுமன்றத்தில் அவர்கள் பதிலளிக்கும் போது கூறியதை. வைத்துத்தான் பத்திரிக்கைகள் செய்தி வெளியிட்டுள்ளன. பிரிட்டன் உத்தியோக பூர்வமாக இலங்கை அரசைக் கேட்டு அல்லது விடுதலைப் புலிகளிடம் அறிவித்து ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கின்ற போது தான் நாங்கள் அதில் ஏதாவது செய்ய முடியும்.

# உலக மக்கள் பெயர் மூலம் யாவும் தமிழே

1, பழைய தமிழ்ப் பெயர்களான சாத்தன், சங்கன், வீரன், காடன், மாறன், மாடன் போன்றவை இன்றும் உலக 'ஒதுக்குப்புற நாடுகளிலும், தீவுகளிலும்' கூட உள்ளன.

2. தமிழ் ஆதனை மேற்கு ஆசிய மக்கள் ஆடம் மாலிக் போன்று பயன்படுத்த, ஐரோப்பியர் ஆடம் ஸ்மித் போன்று பயன்படுத்துகின்றனர்.

3. மகன் என்பது மான் எனக் குறுகும். தொண்டமான், மலையமான், பெருமான் என்றெல்லாம் இங்கு வழங்கப் படுவது போல அரேபியர் நுக்மான், சுலைமான், ரஹ்மான் (இரக்கமான மகன்) என்றும், ஐரோப்பியர் நியூமான்' சீமோன், ஹாப்மேன் போன்றும்பயன்படுத்துகின்றனர். அது மேலும் மக் என்று குறுகி மக்மில்லன், மக் ஆர்தர் போன்று கெல்டிக் மக்கள் மட்டுமின்றி ஐரோப்பிய அமெரிக்க மக்களும் பயன்படுத்துகின்றனர்.

4. அன்னை என்பது அன்னாள், அன்னி, அன்னா கரீனா, அன்னி பெசன்ட் என்று பல வகையில் ஐரோப்பிய மொழிகளில் வரும்.

5. பாலன் பால்குடித்து வளரும் பருவத்தின் அடியாகப் பிறந்த சொல். பாலமுருகன் போன்று குழந்தைக் கடவுளையும் குறித்தது. பால் என்ற சொல் ஐரோப்பா முழுவதும் உண்டு. மேற்காசிய நாடுகளில் இச் சொல் கடவுள் என்ற பொருளில் வழங்கப்படுகிறது.

6. அரசன்-ராஜா, ராஜன். ராஜ் என்று இந்தியா முழுவதும் உண்டு. ராஜா பிறழ்ந்து ஜார் என்வும் வரும். ஜரினா பெண்பாலாகும். பொருள் அரசி.

7. அரசி-ராசி, ராஜி, ராஞ்சி ராணி போன்று மாறி இந்தியா முழுவதும் வழங்குகிறது.

8. அரையன் என்பது திரிந்து ராயன், ராய், ராவ் என்றெல்லாம் பல மொழிகளில் உலவுகிறது.

9. அரி என்பது அலிஎன்றுமாறி ஐதர்அலி, முகம்மதலி என்றும், அலெக்ஸ் என்று மேலும் பிறழ்ந்து லியோ என்றும் சிங்கம் என்ற பொருளில் உலகம் முழுதும் பயணித்துள்ளது. எடுத்துக்காட்டு : லியோ டால்ஸ்டாய். அலெக்சாண்டர்.

10. எல் என்பது எலிசா, எலினார், எலிசபெத் என்றும். இஸ்ரேல், காப்ரியேல் என்றும் ஈபுரு மொழியில் வரும். அதுவே அல் என்று பிறழ்ந்து அல்லா, அலாவுதீன் போன்று அரபி மொழியில் பல சொற்களைப் படைக்கும்.

11. அப்பா, அம்மா என்பன அபா, உம்ம, உமர் என்றெல்லாம் மாறும்.

12. அகம், முகம் என்பன அகமது, முகமது போன்று விரியும்.

13. கரி என்பதில் உள்ள க, ச என மாறி, சார்லஸ், காரி, கார்லட்டி என்றும் வரும்.

14. மல் என்ற போரைக்குறிக்கும் சொல் மல்லன், மல்லம்மா என்றெல்லாம் வரும். மல்லன் ஆங்கிலத்தில் மில்லன், மில்லர் என்று வரும்.

15. ஆடு, மாடு போன்ற பழந்தமிழ்ச் சொற்கள் ஆண்டர், ஆந்தர், மகதலேனாள் போன்று பல சொற்களைப் பிறப்பித்துள்ளன.

-மொழி ஆய்வறிஞர் சாத்தூர்சேகரன்

# வன்னிக்காட்டில் ஹெலிகொப்டரை அரசே எரித்தது

கடந்த 7-12-96 அன்று சிறீலங்காவின் இராணுவ அமைச்சர் அனுரத்த ரத்வத்த மற்றும் சில அதிகாரிகள் சென்ற அரசின் ஹெலிக்காப்டர் எந்திரக் கோளாறு காரணமாக புலிகள் ஆதிக்கத்திலுள்ள வன்னிக்காட்டில் தரையிறங்கியதும், அவர்கள் நடந்தே சென்று தப்பித்ததும் ஏற்கனவே வந்த செய்தி.

அப்படித் தரையிறங்கிய ஹெலிகாப்டரை அது புலிப் படையின் கையில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக அந்த இடத்திலேயே இராணுவத்தினர் அழிந்துவிட்டதாக பி.பி.சி. அதே தினத்தில் ஒலிபரப்பிய தனது செய்தியில் கூறியுள்ளது:

படிப்பகம்

www.padippakam.com



# உரும்பிராய் ரஜினியின் மர்ம மரணம் அம்பலமானது எப்படி?

1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி ரஜினி என்ற 23 வயது இளமங்கை உரும்பிராய் வடக்கிலுள்ள தனது வீட்டிலிருந்து மானிப்பாயிலுள்ள தனது சிறிய தாயார் வீட்டிற்குச் செல்லத் துவிச்சக்கர வண்டியில் புறப்பட்டாள்.

பலாலி - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக நீண்ட மண்மேடாலான அரண் யாழ் பல்கலைக் கழக வளவு வரை செல்கிறது. இதனைத் தாண்டி மேற்குப் புறத்திலுள்ள இடங்களுக்குச் செல்வதானால் இராணுவத்தினரின் அனுமதி தேவை.

அரச பணியாளர், தனியார் துறையில் தொழில்செய்வோர் ஆகியவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோர் வாரத்தில் ஒரு நாள் திங்கட்கிழமை மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

## பெற்றோர் அதிர்ச்சி

மானிப்பாய் நகர் மேற்குப் பக்கத்தில் இருந்தது. ஆகவே தான் திங்கட்கிழமையான அன்று ரஜினி புறப்பட்டாள். கோண்டாவிலில் இலங்கை போக்குவரத்து சாலைக்கு அருகில் அமைந்துள்ள இராணுவச்சாவடியூடாகவே மேற்கே செல்லமுடியும். அவ்வழியூடாக மானிப்பாய் சென்றாள். சிறிய தாயாரின் மானிப்பாய் வீட்டில் மாலை 3 மணி வரையில் தங்கிவிட்டு அங்கிருந்து உரும்பிராய் போகப் புறப்பட்டாள்.

மாலை 6 மணி ஆகிவிட்டது உரும்பிராயிலுள்ள வீட்டிற்கு ரஜினி வரவில்லை. கோண்டாவிலிலுள்ள இராணுவச் சாவடியூடாக மாலை 5 மணிவரையும் தான் இந்தப் பக்கம் வரமுடியும். 6 மணி வரை வராததனால் மானிப்பாயில் தங்கிவிட்டாள் என்று பெற்றோரும் மாமனும் நம்பினர்.

'போனால் வருவதற்கு அங்கே ஏன் நிற்கவேண்டும் இனி அடுத்த திங்கட்கிழமை தானே வரமுடியும்'' என மாமன் குறை கூறினார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை (1-10-96) மானிப்பாயிலிருந்து வந்த இவர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர் ரஜினி முதல் நாள் மாலையே புறப்பட்டு வந்த தகவலைக் கூறவே பெற்றோர் அதிர்ச்சியடைந்தனர்.

கோண்டாவிலிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என முடிவு செய்து ரஜினியின் தந்தையான வேலாயுதபிள்ளையும் மாமனுமாக இச்சாவடிக்குச் சென்று விசாரித்தனர்.

தாம் எவரையும் கைது செய்யவோ தடுத்து வைக்கவோ இல்லையென கோண்டாவிலில் உள்ள சோதனைச் சாவடிப் பொறுப்பாளர் கூறினார். தந்தையும் மாமனும் மேலும் அதிர்ச்சியடைந்தனர்.

## படையினரின் கைவிரிப்பு

இந்நிலையில் மேற்கொண்டு எங்கு விசாரிப்பது என்ன செய்வது எனப்புரியாது விழித்த தந்தை வரும் வழியில் பலரிடமும் இதுபற்றிக் கதைத்தார். அப்போது ஒரு தகவல் கிடைத்தது.

உரும்பிராயைச் சேர்ந்த ஒருவர், தான் திங்கட்கிழமை மாலை பலாலி வீதி வழியாக வருந் போது உரும்பிராய் தெற்கிலுள்ள வீதிக் காவலரண் ஒன்றில்ரஜினியை அங்கு கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய்கள் மறித்து விசாரித்ததைக் கண்டதாகக் கூறினார்.

தந்தை சில உறவினர்களுடன் சென்று குறிப்பிட்ட காவலரணில் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய்களிடம் விசாரித்தபோது அவர்கள் தமக்கு எதுவுமே தெரியாது எனக் கையை விரித்தனர்.

ஒரு வாரமாகத் தந்தையும் உறவினர்களும் திருநெல்வேலி புன்னாலைக்கட்டுவன் முதலான பல இராணுவ முகாம்களுக்குச் சென்று விசாரித்தனர். பலனில்லை. எல்லோரும் தமது முயற்சியில் சோர்ந்து விட்டனர்.

## துப்புத்துலங்கியது

இதே நேரத்தில் வேறுபல புதிய தகவல்கள் வெளியாகத் தொடங்கின. செப்டம்பர் 30ந் திகதி உரும்பிராய் தெற்கிலுள்ள காவலரணில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது தமது சமயோசித புத்தியால் நான்கு இளம் பெண்கள் தப்பி வந்திருந்தனர். இக்காவலரணில்சோதனையிட வேண்டும் என்று அழைக்கப்பட்ட போது இங்கு பெண் பரிசோதகர்இல்லாததை அவதானித்த இப்பெண்கள் சோதனைக்கு உட்பட மறுத்து ஓடி வந்து விட்டனர்.

ஒரு 16 வயது இளம் பெண் தமது துவிச்சக்கர வண்டியையும் கைப்பையையும் கூட அங்கே விட்டு விட்டு ஓட்டமாக ஓடி வீடு வந்து சேர்ந்தார். பின்பு இவரின் தந்தை சென்று அவற்றை மீட்டு வந்தார்.

இத் தகவல்கள் வெளியானதும் இக் காவலரணில் தான் ரஜினிக்கு ஏதோ நடந்திருக்க வேண்டும் என்பது புலனாயிற்று உரும்பிராய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அனேகர் கூடி இது பற்றி ஆராய்ந்ததன் முடிவாக எல்லோருமாகச் சென்று கோண்டாவிலில் உள்ள இராணுவ முகாம் பொறுப்பாளரிடம் நீதி கேட்பதென முடிவாயிற்று.

7-10-96 திங்கட்கிழமை வயது முதிர்ந்த அனைவரையும் ஒன்று கூடும்படி கோரி அறிவித்தல் வீதிதோறும் ஒட்டப்பட்டது. அன்று காலை 9 மணிக்குப் பலர் கூடினர். கூட்டம் ரஜினியின் தந்தையின் தலைமையில் கோண்டாவில் இராணுவ முகாம் சென்றது. பொறுப்பாளரிடம் கோரிக்கை மனு கையளிக்கப் பட்டது.

## தனித்தனி வாக்குமூலம்

இம்மனு உடனே அச்செழுவிலுள்ள 51வது படையணித் தலைவர் ஜானகபெரேராவிடம் கையளிக்கப்பட்டது. புலனாய்வுத் துறையினர் உடனடியாகவே விசாரணைக்கு அமர்த்தப்பட்டனர்.

காவலரணில் கடமையில் இருந்தவர்களை அடையாளம் கண்ட சிலரிடம் அவர்களின் அங்க அடையாளங்களைப் பெறும் வாக்குமூலங்கள் அவரால் இரகசியமாகப் பெறப்பட்டன. பகிரங்கமாக வாக்குமூலமளிக்க எல்லோரும் அஞ்சியதனால் இவ்வாறு தனித்தனியே இரகசியமாகப் பெறத் பட்டன.

இவற்றின் அடிப்படையில் அன்று மாலையே 4 சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் சில தினங்கள் எதுவித தகவலுமின்றி அமைதியாகவே கழிந்தன. ரஜினி உயிருடன் இருக்கிறாளா? இல்லையா? என்பதனை அறியும் ஏக்கத்துடன் பெற்றோர் தவித்தனர்.

## நெஞ்சைப்பிழியும் நிகழ்வொன்று

இக்கால கட்டத்தில் ஒரு நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவம் ஒன்று ரஜனி காணாமற் போனதற்கு மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் பூசகர் பூசைக்கான ஆயத்தங்கள் யாவற்றையும் முடித்து விட்டு யாரையோ எதிர்பார்த்தபடி பூஜையை நடத்தாமல் தாமதம் செய்து கொண்டிருந்தார்.

ரஜினி செவ்வாய் வெள்ளி தினங்களில் ஆண்டாள் மாலை கட்டிக் கொண்டு வந்து அம்மனுக்குச் சாத்துவது வழக்கம். அன்று ரஜினி வராததனால் அவர் வரத் தாமதமாவதாக நினைத்து பூசகர் அவர் வரும்வரை தாமதித்தார். தாமதம் செய்வதற்கான காரணத்தைச் சில பக்தர்கள் விசாரித்தபோது பூசகர் இதனைக் கூறினார். ரஜினியைக் காணவில்லை என்ற சேதி வெளியிடப்பட்ட பின்பு, பூசை ஆரம்பமாகியது. இச்சம்பவம் அனைவரினதும் நெஞ்சை விட்டகலாத நிகழ்வாகி விட்டது.

## ரஜினியின் உடல்

அங்கே ஒரு இடத்தையடைந்ததும் ஒரு நாய் அங்கு சுற்றிச்சுற்றிவந்து குரைத்தது. அங்கே தான் ரஜினியின் இறந்த உடல் இருக்க வேண்டும் என்று புலனாய்வாளர்கள் தீர்மானித்திருக்கவேண்டும்.

காலை 8மணி ரஜினியின் பெற்றோர் ஒரு பொது இடத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்களிடம் சில தகவல்கள் அடங்கிய வாக்குமூலம் பெறப் பட்டது.

நண்பகல் வேளை உருக்குலைந்த நிலையில் ரஜினியின் உடல் வெளியே எடுக்கப் பட்டது. யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு மறுநாள் விசேட விமான மூலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

## வெறும் ஆறுதல்

தொடர்ந்து தேடுதல் நடத்திய புலனாய்வாளர்கள் ரஜினி அணிந்திருந்த உடைகள், நகைகள் பயன்படுத்தியதிய துவிச்சக்கர வண்டி ஆகியவைகளையும் கைப்பற்றினர் துவிச்சக்கர வண்டி பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்தது.

51வது படையின் தளபதி திரு. ஜானக பெரேராவிடமிருந்து திரு வேலாயுதபிள்ளைக்கு அனுதாபக் கடிதம் கிடைத்துள்ளது. கடிதத்தின் வாசகங்கள் வருமாறு:

தங்கள் 4-10-96 திகதிக் கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

உங்களுடைய விடயம் தெரிய வந்தவுடன் எமது இத் தலைமையகம் ஆரம்ப நடவடிக்கையில் உடன் இறங்கியது. காணாமற் போன தங்கள் மகளின் இறந்த உடல் மீட்கப்பட்டுள்ளது என்பதனை ஆழ்ந்த வேதனையுடன் அறியத்தருகிறேன்.

நானும் ஒரு தந்தை என்ற வகையில் உங்கள் வேதனையையும் துயரத்தையும் உணர்கிறேன். அந்த வேதனையையும் துயரத்தையும் எனது ஆறுதல் வார்த்தைகளினால் குறைக்க முடியாது என்பதனை நான் அறிவேன்.

இக்கொடூரமான செயலுக்குக் காரணமாக இருந்தவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதற்கு என்னாலான சகலதையும் செய்வேன். இப்படியான வேதனையும் துன்பமும் வேறு எந்தப் பெற்றோர்களுக்கும் இனி ஏற்படாது தடுக்க ஆக வேண்டிய ஏற்பாடு செய்துள்ளேன்.

தகவல்: பழையூர் சுந்தரம்பிள்ளை

---

### சுய வருவாய் திட்டத்தின் கீழ்

# தாப்பாத்தி முகாமில் கோழி வழங்கல்

ஈழத்தில் சிங்கள ஏகாதிபத்திய அரசின் இனப்படுகொலையின் காரணத்தால் 1990-ல் ஈழத்தமிழர்கள் அகதிகளாக பாரதத்தில் தஞ்சம் அடைந்தார்கள்.

தஞ்சம் அடைந்த அகதிகளை நல் வழிப்படுத்தும் நோக்குடன் பல அரிய சேவைகளை ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் செயல்படுத்தி வருகின்றது. இச் சேவைகளில் ஒன்றாக சிதம்பரனார் மாவட்டம் தாப்பாத்தி அகதிகள் முகாமில் உள்ள கணவரை இழந்த விதவைகள். மற்றும் நலிவுற்றோருக்கும் 200 கோழிகள் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக 18-11-96 அன்று 32 குடும்பங்களை சேர்ந்த விதவைகளுக்கு தலா (5) ஐந்து கோழி வீதம் 160 கோழிகள் வழங்கப்பட்டன.

இக்கோழிகளை கழக மாவட்டத்தொண்டர் T. கணேஷ் வேலாயுதம், மற்றும் தாப்பாத்தி முகாம் நற்பணி மன்ற தலைவர் ராஜபாண்டியன், செயலாளர் தவலத்காரன், பொருளாளர் நாகநாதன் கணேஷ், நிக்கலஸ், பத்மநாதன், முகாம் நலபபணியாளர்கள் வியாசர்மணி, கனிசியஸ் ஆகியோர் வழங்கினார்கள்.

செய்தி தொகுப்பு : நாகநாதன் கணேஷ்.

---

# ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பிய யாழ். வாலிபர் கைது

ஜேர்மனியில் 'அகதி அந்தஸ்து' கோரிக்கை நிராகரிக்கப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு நாடு திருப்பியனுப்பப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மோகனராஜா துரைசிங்கம் (வயது20) என்ற வாலிபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

ஜெர்மனியில் இருந்து நாடு திருப்பியனுப்பப்பட்ட மோகனராஜா துரைசிங்கம் எங்கிருக்கிறார் என்று எதுவுமே தெரியவில்லை என்று இலங்கையில் உள்ள உறவினர்கள் தெரிவித்திருந்தாக ஜெர்மனியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க காரியாலத்துக்கு ஃபாக்ஸ் செய்தியொன்றை அனுப்பி வைத்திருக்கிறது!

படிப்பகம்

www.padippakam.com



# ஒரு குறளை உணர்வோம்

## (38) மகன் என்பவன் யார்? அவன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமை என்ன?

-'அருகோ'-

''மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்''

குறள் : 70

பரிமேலழகர் : தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி— கல்வியுடையனாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறாவது; இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்-தன்னறிவும் ஒழுக்கமும் கண்டார் இவன் தந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தான் கொல்லோ என்று சொல்லும் சொல்லை நிகழ்த்துதல்.

'சொல்' என்பது நிகழ்த்துதலாகிய தன் காரணம் தோன்ற நின்றது. நிகழ்த்துதல் அங்ஙனம் சொல்ல ஒழுகல்.

இதனால் புதல்வன் கடன் கூறப்பட்டது.

மணக்குடவர் : மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரம் இவன் தந்தை என்ன தவம் செய்தான் என்று உலகத்தார் சொல்லும் சொல்லைப் படைத்தல்.

இது, நெறியின் ஒழுகுவாரை உலகத்தார் புகழ்வார். ஆதலான் மகனும் ஒழுக்கமுடையவனாக வேண்டும் என்றது.

பரிதியார் : புதல்வர் தந்தைக்குச் செய்யும் உதவி இவரைப் பிள்ளையாகப் பெறும்படி இவர் தந்தை என்ன தவம் செய்தாரோ என்று சொல்லும்படியாக அறிவுடையனாதல்

காளிங்கர் : தன்னைக் கல்வியாலும் மற்ற அறிவுடைமையாலும் உணர்வுடையவனாகச் செய்த தந்தைக்குப் புதல்வன்செய்யும் கைம்மாறு யாதோவெனில், இவன் தந்தையானவன் இவனைப் புதல்வனாகப் பெறுதற்கு, 'முன்பு என்ன தவம் செய்நானோ' என்று உலகத்தார் ஏத்தி எடுத்து உரைக்கும் சொல்.

டாக்டர் மு.வ. : மகன் தன் தந்தைக்குச் செய்யத் தக்க கைம்மாறு இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ' என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்

இந்தக் குறட்பாவில் திருவள்ளுவர் சொற்களைக் கையாளும் விதம் இருக்கிறதே அது எண்ணி எண்ணி இரும்பூது எய்தத்தக்கதாகும்.

முதலாவது மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமையை 'நன்றி' என்று கூறாமல் உதவி' என்று குறிப்பிட்டிருப்பது.

இரண்டாவது, தந்தை இந்த மகனைப் பெற என்ன 'தவம்' செய்தானோ என்று குறிப்பிடாமல் என்ன 'நோற்றான்' என்று குறிப்பிட்டிருப்பது.

மூன்றாவது, தந்தைக்குப் புண்ணியத்தைக் கூட்டாமல் புகழ் என்னும் 'சொல்லைப்' படைத்தலை நாட்டியிருப்பது.

ஏனெனில் மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடப்பாட்டை இக்குறட்பாவில் கூறியிருப்பதைப் போலவே, இன்னொரு குறட்பாவில், தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய கடப்பாட்டைக் கூறும்போது வள்ளுவர், அதை 'நன்றி' என்றே குறிப்பிடுகிறார். அதாவது,

''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

என்று குறிப்பிடுகிறார். நடைமுறை உலக வழக்கின்படி நோக்கினால் மகன் தானே தந்தைக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறான் ? அப்படியிருக்க, 'மகன் தந்தைக்காற்றும் நன்றி'' என்றும், ''தந்தை மகற்காற்றும் உதவி'' என்றும் சொல்லியிருந்தாலன்றோ பொருத்தமாக இருக்கும் என எண்ணத் தோன்றுகிறதல்லவா !

ஆனால், 'செஞ்சோற்றுக்கடன்' என்று தீமைக்கு அல்லது அறியாமைக்குத் துணை போகும் செயலைத் திருவள்ளுவர் திருக்குறளில் எங்கேயும் வலியுறுத்த வில்லை.

'நன்றி' என்பதை 'நன்மை புரிதல் என்ற பொருளிலு 'உதவி' என்பதை ஊன்றி நிலை நிறுத்துதல்' என்ற பொருளிலும் தான் அவர் கையாண்டிருப்பதைக் காண முடியும்.

அந்த வகையிலேதான் தந்தைக்குச் செஞ்சோற்றுக் கடனாக அத்தந்தை தீயவனாக இருப்பின் அத்தீய வழியையே தானும் மேற் கொள்ளாமல் அல்லது அத்தீய வழியில் தந்தை விட்ட குறையை முடிப்பதுதான் மகனுடைய கடமை என்று கொள்ளாமல் உலகத்தார் வியந்து பாராட்டும் படியான சாதனைகளைப் புரிந்து, 'இவனைப் பெற இவன் தந்தை என்ன நோற்றானோ'' என்று புகழும் புகழைத் தேடுவதே மகனின் கடமை என்று வலியுறுத்துகிறார்.

ஒருவன், மற்ற சராசரி மனிதர்களைப் போல வாழ்வதன் மூலம் இவனைப்பெற இவன் தந்தை என்ன நோன்பு நோற்றானோ!' என்ற சொல்லைத் தேடி விட முடியாது. மாறாக மற்றவர்கள் புரியாத, சாதாரணமானவர்களால் சாதிக்க முடியாத அரிய சாதனையைப் புரிவதன் மூலமே அந்தப் பெரிய புகழைப் பெற முடியும். ஒவ்வொரு மகனும் அதைப் பெற முயல வேண்டும் என்ற நோக்குடனேயே வள்ளுவர் இக்குறட்பாவை ஆக்கியளித்திருக்கிறார்.

அதனால்தான் அத்தகைய சாதனையாளனை மகனாகப் பெறும் தந்தையின் செயலை 'நோன்பு என்கிறார் இங்கே ''உண்டாலம்ம இவ்வுலகம்...தனக்கென வாழா நோன்றாள் பிறர்கென வாழ்நர் உண்மையானே'' என்ற புற நானூற்றுப் பாடல் ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இந்த நோன்பு உடலுறவால் பெற்ற தந்தைக்கு மட்டுமின்றி வளர்த்த தந்தைக்கும் பொருந்துமன்றோ ! இன்னும் சொல்லப் போனால் அவனை மகனாகப் பெற்ற குடும்பத்திற்கு, குமுகத்திற்கு, ஊருக்கு, நாட்டுக்கும்கூட இது பொருந்தும்.

ஆக சாதனை படைப்பதே மகனுடைய கடமை என்பதைச் சாற்றுவதே இக் குறட்பா என்றால் மிகையாகாது.

---

சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்:

## அரசு ஊழியர்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

இன்று சர்வதேச மனித உரிமை தினம் என்பதை முன்னிட்டு சிறீலங்கா அரசின் அடக்கு முறைக்கும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தைத் தொடருவதற்கும், அரசு ஸ்தாபனங்களைத் தனியார் மயப்படுத்துவதற்கும் எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றினைத் தொழிற் சங்கங்கள் இடதுசாரிக் கட்சிகள், முற்போக்கு எண்ணம் கொண்ட சிறுகுழுக்கள் சேர்ந்து கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடத்தினர்.

சிறீலங்காவின் சந்திரிகா அரசு, அரசு கூட்டுத்தாபனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக சிறீலங்கா வர்த்தகக் கூட்டுத்தாபன ஊழியர்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். முக்கியமாக சில கூட்டுத்தாபனங்களை கொரியா நாட்டினரிடம் ஒப்படைப்பதற்கு எதிராக பெரும் முழக்கம் எழுப்பியபடி ஆயிரக்கணக்கில் திரண்டனர்.

அவர்களைக் கட்டுப்படுத்த கழகங்களை ஒடுக்கும் விசேட காவல்துறையினர் நூற்றுக்கணக்கானோர் அனுப்பப்பட்டனர். ஒரு புறம் நாட்டைக் காப்பாற்ற என்று சொல்லி யுத்தம் செய்து கொண்டு மறுபுறம் நாட்டில் பொருளாதாரத்தை அன்னியரிடம் ஒப்படைப்பதையும் அவர்கள் கண்டித்தனர்.

ஆர்ப்பாட்டம் பெரும் போராட்டமாக மாறக் கூடிய சூழ்நிலையை அவதானித்த காவல்துறையினர் அலுவலகத்தில் உள்ளிருந்த கொரியா நாட்டினரையும் இலங்கை அரசின் உயர் அதிகாரிகளையும் பாதுகாப்பாக வெளியேற்றினர்.

இவ்வாறு பி.பி.சி. தனது சிங்கள சேவை ஒலிபரப்பில் 10-12-96 அன்று வெளியிட்ட தகவல்.

---

## கடலோரம் ஒதுங்கிய தமிழ்ப் பெண்கள் சடலங்கள்

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து ஆற்றில் மிதந்து சாக்குப் பொதிகளில் மூன்று மாணவிகளின் பிணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வெள்ளை நிறப் பள்ளிச் சீருடை அணிந்த நிலையில் தென்பட்ட இச்சடலங்களில் ஒன்றின் கழுத்தில் ரை (மிடற்றுக் கட்டி) காணப்பட்டது. இது புலிகள் செய்த கொலையா? என்று கூறுவதற்கில்லை. எனினும் கடந்த கால நிகழ்ச்சிகளை நோக்குய்போது, புலிகளைப் போன்றே இராணுவமும் அப்பாவி மக்களைத் துன்புறுத்துவதாகவும், கொன்றொழிப்பதாகவும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இப்பகுதியில் நடக்கும் இப்படியான செயல்களுக்கு இரு பகுதியினருமே பொறுப்பேற்க வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைக் கழகம் கூறுகின்றது.

முல்லைத் தீவுப் பகுதியுடன் எமக்கு நேரடித் தொடர்பு சரியான முறையில் இல்லாத காரணத்தால் இதை யார் செய்தார்கள் என்று சொல்ல முடியாது. எனினும் பிணங்கள் வந்ததைப் பார்த்தால், இது வடக்குக் கிழக்கோடு தொடர்புடையது என்று அனுமானிக்கலாம்.

பி.பி.சி. சிங்களசேவை ஒலிபரப்பிலிருந்து.

---

### என்றும் வாழ்த்தும் என் நெஞ்சில் என்றென்றும் வாழும் என் பாசத்திற்குரிய

## ஈழ உடன்பிறப்புக்களே! ஏதிலிச் சகோதரர்களே!

இது மார்கழித்திங்கள் கடும் குளிர் ! ஆனாலும் ஒரு குதூகலம். கிறிஸ்துமஸ் பண்டிகை ! தங்களை வாழ்த்துவதற்கு வார்த்தைகளைத் தேடி அலைந்தேன். வினாக்கள் மட்டுமே எஞ்சின.

'எம்மவர்க்கும் உண்டோ கிறிஸ்மஸ் !

இலட்சோப லட்சம் கலப்பைகள் உழுதுவரும் எம் மண்ணில். இன்று அரச கனரகப்போர் ஊர்திகள் உலா வருகின்றன. கட்டு மரங்களும் மீன்பிடிப்படகுகளும் நீந்தி விளையாடும் எம் நீரை இன்று அரச பீரங்கிப்படகுகள் ஆக்கிரமித்துள்ளன. மாதம் மும்மாரி பொய்க்காமல் பொழியும் எம் வானிலிருந்து 'புக்காராக்கள்' குண்டுமாரி பொழிகின்றன.

இவ்வேளையில் எம்மவர்க்கும் உண்டோ கிறிஸ்துமஸ்!'

நிலமுள்ள மக்களாக இருந்தும் நிலமற்ற மக்களாக, மழையிலே நனைந்து, மரநிழலில் ஒதுங்கி அகதிகளாய், ஏதிலியராய் எம் உடன் பிறப்புக்கள் அலைந்து திரியும் இவ்வேளையில்...

'எம்மவர்க்கும் உண்டோ கிறிஸ்துமஸ் !'

வாழ்விழந்து, வளமிழந்து வரலாற்றுப் பொருமையுமிழந்து புலம்பெயர்ந்து அகதிகளாக நாம் வாழ்கின்ற இவ்வேளையிலே

'எம்மவர்க்கும் உண்டோ கிறிஸ்துமஸ் !'

ஆம் என்கிறது இயேசு காவியம் !

'பல்லாண்டு பல்லாண்டு பாலைவனத்திலிருந்து எல்லாமே இழந்து வந்த இஸ்ரேலியரையும் காத்தார் இயேசு.

எம்மவரையும் காப்பாரா ?
ஆம் ! நிச்சயம் காப்பார்.
நம்பிக்கைதானே வாழ்வு !

என்றும் நம்பிக்கையோடு, இயேசுவின் அன்பிலும் தங்கள் நினைவிலும் வாழ்த்தும்...

உங்கள் 'முகத்தான்'
ஜேசுரத்தினம்
ஆர்னோவில்-லெஸ்-கோனெஸ், பிரான்சு

படிப்பகம்

www.padippakam.com



# இனவாதப் போரே!... (முதல் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாக அடைக்கலம் கொடுத்தாலும் சந்தேகத்துக் குரியவர்களாகி விடுவார்கள்.

அப்படி சந்தேகத்துக் குரியவர்களாக கொழும்பில் பொலிசாரால் பிடிக்கப்படுகிறவர்கள் 48 மணி நேரம் பொலீஸ் காவலில் வைக்கப் படுகின்றனர். அப்போது புலனாய்வுத் துறையினர் வந்து விசாரித்து, விட்டு விடலாம் என்று சொன்னால்தான் விடப்படுவார்கள். இல்லையென்றால் 15 நாள் தடுப்புக் காவலில் சிறைக்கு அனுப்பப் பட்டு விடுவார்கள். இப்படி எந்த விதக் குற்றச்சாட்டுமில்லாமல் திரும்பத் திரும்பச் சிறைக்கு அனுப்பப்படுபவர்களும் உண்டு. அப்படியே காணாமல் போகின்றவர்களும் உண்டு. சிறீலங்காவின் ஒரு நாடு, ஒற்றையாட்சி,ஒருமைப்பாடு இலட்சணம் எப்படி இருக்கிறது பார்த்திர்களா?

### இந்தியா வர ஏன் துடிக்கின்றனர்?

வடமாகாணத்தில் நடைபெற்று வரும் இடைவிடாத போரின் காரணமாக கிழக்கு மாகாணத்திலிருந்து பெரும் பகுதி இராணுவத்தினர் வடபகுதிக்கு அனுப்பப்பட்டு விட்டதால், பகல் பொழுதில் ஊர் காவற்படைகளின் கெடுபிடிகளால் சுதந்திரமாக நடமாட முடியாவிட்டாலும், இரவு நேரத்தில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் சுறுசுறுப்பாக இயங்கி, தங்கள் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை ஓரளவுக்கு நிறைவு செய்துகொள்கிறார்கள். இருப்பினும் அங்கும் ஏதாவது ஒரு இடத்தில் புலிகள் சுட்டாலோ, கண்ணி வெடி வெடித்தாலோ, அப்பகுதியைச் சுற்றிலுமுள்ள தமிழ் மக்கள் சுற்றிவளைக்கப் பட்டு இராணுவத்தினரால் பழி வாங்கப்படுகின்ற நிலை அங்கும் இருந்தே வருகிறது.

இதனால் ஈழத் தமிழ் மக்கள், குறிப்பாக வடபகுதித் தமிழ் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வெளியேறுவதையே பெரிதும் விரும்புகின்றனர்.

### உயிரைப் பணயம் வைத்து...

விவசாயம் செய்ய முடியாது. மீன் பிடிக்க முடியாது. வேறு எந்தத் தொழிலும் இல்லை. வாழ்க்கை நடத்துவதற்கு வருவாய் ஈட்ட வழியுமில்லை. வீட்டிலேயே முடங்கிக் கிடக்கலாம் என்றாலும் உயிருக்கு உத்தரவாதமில்லை பெண்களின் கற்புக்குப் பாதுகாப்பில்லை என்கிறபோது இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றாவது புகலிடம் பெறலாம் என்ற கடைசி பட்ச நிலையில் அவர்கள் இந்தியாவுக்குக் கிளம்புகிறார்கள்.

இந்தியாவுக்கு வருவது ஒன்றும் ஈழத்தமிழ் மக்களுக்கு எளிதான காரியமில்லை. உயிரைப் பணயம் வைத்துத்தான் அவர்கள் அந்தப் பயணத்தை மேற்கெள்கின்றனர். அப்படியானால் சிறீலங்கா அரசும், இராணுவமும் அவர்களை எந்த நிலைக்குத் தள்ளியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆம்; கடற்கரை முழுதும் காவல். படகுகள் எல்லாம் பறிமுதல். அப்படியே படகு கிடைத்தாலும் தலைக்கு ஐயாயிரம், பத்தாயிரம் என்று தாலிக்கொடியையும் விற்றுப் பணம் கொடுத்துத்தான் அவர்கள் இந்தியாவுக்குப் பயணப் படுகின்றனர்.

### பரோபகாரத்திற்கு தண்டனை

இந்நிலையிலும் நடுக் கடலில் கண்டாலும் சிங்களக் கடற்படை சுட்டுத் தள்ளுகிறது படகோடு கடலில் மூழ்கடிக்கிறது. அப்படி நடுக் கடலில் சுடுபட்டு, படகோடு மூழ்கும் நிலையில் தத்தளிக்கும் மக்களைத்தான் மனிதாபிமான அடிப்படையில் தமிழ்நாட்டு மீனவர்கள் மீட்டு இந்தியாவுக்கு கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

இந்த மனிதாபிமானப் பரோபகாரத்தைச் செய்வதற்காகத் தமிழ்நாட்டு மீனவர்களையும், அவர்கள் மீன்பிடிக்கவே வந்துள்ளனர் என்று தெரிந்திருந்தும் கண்ணில் கண்டாலே சுட்டுத் தள்ளுகிறது சிங்கள கடற்படை. இந்தக் கொடுமையை என்னவென்று சொல்வது!

அதே வேளை இப்படி அகதிகளைக் காப்பாற்றிக் கரை சேர்த்ததற்காக தமிழ்நாட்டு மீனவர்கள் இந்தியாவிலும் தண்டனைக்காளாவதும், அவர்தம் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் நடந்து வருவதைப் பார்க்கிறோம்.

### மொத்த தமிழர்களுக்கும் எதிரான போர்

இந்நிலையில் தமிழ் நாட்டு மீனவர்கள் தங்கள் மீன் பிடித் தொழிலைச் செய்ய முடியாமல் சிங்களக் கடற்படையால் அடிக்கடி சுட்டுத் தள்ளப்படுவதும், கைதுசெய்து கொண்டு செல்லப்படுவதும், படகுகள் பறிமுதல் செய்யப் படுவதும் சர்வதேச நியதிகளுக்குப் புறம்பானதாகும்.

### இது ஏன் நடக்கிறது?

இலங்கைத் தீவின் வடபகுதியில் நடக்கும் இனவாதப் போரின் விளைவாக ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்காச் சிங்கள அரசும்,படையினரும் மேற்கொள்ளும் அழிப்பு, அடக்குமுறை, அட்டூழியத்தின் எதிரொலியாகவே தமிழ்நாட்டு மக்களும் இப்படி பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

ஆகவே, இது புலிப்படையினருக்கும், சிங்கள அரசுப் படையினருக்கும் மத்தியில் நடக்கும் போர் என்று சொல்லப்பட்டாலும், மொத்த இலங்கை-இந்தியத் தமிழ் மக்களையும் பாதிக்கின்ற ஒரு இனவாத நடவடிக்கையாகத் இருக்கின்றது.

### புலிகளைச் சாட்டி மக்களை அழிக்கின்றனர்

புலிகளைச் சாட்டி, 'மகாவம்ச' காலத்திலிருந்து சிங்கள பௌத்த பேரின வாதத்திற்கு தமிழினத்திற்கு எதிராக இருந்து வரும் வஞ்சம்தீர்த்துக் கொள்ளப்படுகிறதோ என்று சொல்லத்தக்க விதமாகத்தான் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

அதே நேரம் சரியோ தவறோ புலிகளும் இந்தியாவுக்கு எதிரிடையானவர்கள் என்ற ஒரு தோற்றம் இந்தியாவில் தமிழகத்தில் எப்படியோ ஏற்பட்டு விட்டது. அதற்கு அவர்கள்தான் காரணம் என்பதையும் மறுக்க முடியாது. அதனால் புலிகளைச் சாட்டி ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக என்ன கொடுமையைச் செய்தாலும் அதனால் தமிழ் நாட்டுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டாலும் இந்தியா கண்டு கொள்ளாது என்கிற நினைப்பிலேதான் தனது தமிழின ஒழிப்பைச் சாமர்த்தியமாகச் செய்து வருகின்றார் சந்திரிகா.

### உதவ முன் வருக

இந்த உண்மை உலகத்திற்கும் இந்தியாவுக்கும் உரிய அளவுக்குத் தெரியவரவில்லை என்பது துரதிருஷ்டவசமானதாகும். அப்பட்டமான இந்த உண்மையை புரிந்துகொண்டு மனிதாபிமான அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்றவும், இந்திய மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை நீக்கவும் இந்தியாவிலுள்ள சனநாயக சக்திகள் மாந்தநேய உள்ளங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு குரல் கொடுக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையில் அழிவது புலிகளல்ல, தமிழினம்; இந்தியாவின் உண்மையான நேச சக்தி. அங்கு நடப்பது உள்நாட்டுப் போரல்ல, திட்டமிட்டு அரசே மேற்கொள்ளும் தமிழின அழிப்புப் போர் என்பதை மனதிற்கொண்டு, தமிழ் மக்களைக் காப்பாற்ற- அவர்களின் மனிதவுரிமையை நிலை நாட்ட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு திரு. சந்திரகாசன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




*யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. *இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.*

T. சுதர்சன்,
நங்கைநல்லூர்

கேள்வி: புனர்வாழ்வுப் பணிகளைப் பார்வையிட நெதர்லாந்துதூதர்யாழ் போன போது, யாழ்ப்பாணத்தை அழித்துக் கொக்கரிக்கும் அனுரத்த ரத்வத்தையும் கூடப் போய் தனது படைகள் மக்கள் குடியிருப்புகளைச் சிதைத்ததையும் காட்டியிருக்கலாமல்லவா?

ப: போரால் சிதைந்த வடக்கைக் கரட்டி மேல்நாடுகளிலிருந்து உதவி பெற்றுத் தெற்கைச் செழிப்பாக்க நினைக்கும் சந்திரிகாவின் அடிமடியிலேயே கைவைக்க நினைக்கிறீர் நீர்!

கே: உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வதற்கு 25000 தொன் விதை உருளைக் கிழங்கை யாழ்குடாவிற்கு அனுப்ப நெதர்லாந்து முன் வந்தது எதைக் காட்டுகிறது?

ப: சிங்களப் பேரினவாத சிறீலங்கா அரசு ஹலிகாப்டர்கள் மூலம் விதைக்கும் குண்டுகள் முளைக்காது (பலிக்காது) என்பதை, அதற்கு எடுத்துக் காட்டுவதாக இருக்கலாம்!

கே: குயுக்தியாரே! இன்று இலங்கைத் தமிழர் படும் வேதனைகளை நேரில் சென்று பார்த்தீரா?

ப: குயுக்தியாருக்கு இந்த உலகத்திலிருந்து முக்தி கொடுக்க சரியான யுக்தி!

கே: வடபகுதியில் கொட்டமடிக்கும் சிங்கள ராணுவம் ஆடு மாடு, கோழிகளையும், குமரிகளையும் விட்டு வைப்பதில்லையாமே?

ப: இலங்கை அரக்கர்களின் தேசம் என்ற இராமாயணக் கூற்றை, அதாவது ஆடு மாடு கோழிகளை விழுங்குவதையும், குமரிகளைக் கொத்திச் செல்வதையும் செயல் படுத்திக்காட்ட முனைந்திருக்கிறார்கள் போலும்!

கே: ஈழத்தந்தை செல்வா அன்றைக்கே சொன்னார் ''தமிழரைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' என்று. ஆனால் குயுக்தியாரே! யாழ்ப்பாணத்தை ராணுவம் பிடித்தபோது அந்தக் கடவுள் கூடக் காப்பாற்றவில்லையே ஏன்?

ப: புதிய கடவுளைக் கற்பித்துத் தமிழர்கள் வழிபடத் தொடங்கிவிட்டதால், பழைய கடவுள் ஊடல் கொண்டு ஒதுங்கியிருக்கலாம்!

கே: வடபகுதியை சந்திரிகாவும், ரத்வத்தவும் சேர்ந்து முப்படைகளைக் கொண்டு மூழியாக்கியும் எந்த நாடும் வந்து பார்க்கவில்லையே! மீண்டும் தந்தை செல்வா, இரும்பு மனிதர் நாகநாதன், வன்னிய சிங்கம் சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை போன்ற தலைவர்கள் பிறந்து வந்துதான் பார்க்க வேண்டுமா?

ப: புதிய தேசியத் தலைவர் இருக்க, அவர்களை யார் வரவேற்பார்கள்? அப்படியே வந்தாலும் முன்பு இயற்கைச் சாவுக்கு இரையான அவர்கள் இப்போது துரோகிப்பட்டம் சூட்டப்பட்டு துவக்குக்கு இரையாகி விடுவார்கள்!

கே: தமிழினத்திற்கெல்லாம் தலைவராக உள்ள கலைஞர் கருணாநிதி, ''ஈழத் தமிழரின் கண்ணீரைத் துடைப்பேன்'' என்று ஒரு வார்த்தை சொன்னால் உலகத் தமிழர்களின் உள்ளமெல்லாம் குளிருமே! சிங்களப் பகையின் துள்ளல் பாதி அடங்குமே! சொல்வாரா?

ப: சொல்ல வைப்பது ஈழத்தமிழரின் ஒற்றுமையிலும் உலகத் தமிழரின் ஒன்றுபட்ட முயற்சியிலும்தான் தங்கியுள்ளது.

(குறிப்பு: இந்த வாசகரின் ஒவ்வொரு கேள்வியுமே ஒவ்வொரு கட்டுரை போல நீண்டிருந்ததால், பதிலளிக்கத் தோதுவாகக் குயுக்தியால் குறுக்கிக் கொள்ளப்பட்டது.

—ஆசிரியர்)

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Salt Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-600008.
Printed at Kuralnery Achagam, Madras-94.

**சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை**

படிப்பகம்